## அல்லாஹ்வின் கட்டளை

اَلَّذِیۡنَ یُنۡفِقُوۡنَ اَمۡوَالَهُمۡ فِیۡ سَبِیۡلِ اللّٰهِ ثُمَّ لَا یُتۡبِعُوۡنَ مَاۤ اَنۡفَقُوۡا مَنًّا وَّلَاۤ اَذًی ۙ لَّهُمۡ اَجۡرُهُمۡ عِنۡدَ رَبِّهِمۡ ۚ وَلَا خَوۡفٌ عَلَیۡهِمۡ وَلَا هُمۡ یَحۡزَنُوۡنَ ○

தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிட்டுப் பின்னர் எவ்வகையிலும் உபகாரத்தை நினைவூட்டாமலும், எவ்விதத்திலும் துன்பத்தைக் கொடுக்காமலும் இருப்போருக்கு அவர்களின் கூலி அவர்களின் இறைவனிடம் உண்டு. அவர்களுக்கு எவ்வித அச்சமும் ஏற்படாது. அவர்கள் கவலையடையவுமாட்டார்கள். (2:263)


بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلّی علیٰ رسولہ الکریم　　وعلیٰ عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 33

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

4 ஸுல்ஹஜ் 1439 ஹிஜ்ரி கமரி 16 ஸஹுர் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி
16 ஆகஸ்ட் 2018


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: நூஹ் நபியின் கப்பல் என்ற நூலில் நமது போதனைகள் அடங்கிய பகுதி எங்கு உள்ளதோ அவற்றை கண்டிப்பாக ஒவ்வோர் அஹ்மதியும் படிக்க வேண்டும். இன்னும் கூறுவதென்றால், முழு நூலையும் படிக்க வேண்டும்**

**மலைகள், பூமி இவற்றின் ஒவ்வோரு துளியும், மரங்கள் புற்பூண்டுகள் இவற்றின் இலைகள் அவற்றின் ஒவ்வொரு பகுதியும், மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றின் எல்லா அணுக்களும் இறைவனைக் கண்டறிந்து கொள்கின்றன. மேலும் அவை அவனை பணிவதிலும் அவனைப் புகழ்வதிலும் துதிப்பதிலும் முனைப்புடன் ஈடுபட்டிருக்கின்றன. மேகமாக இருந்தாலும் சரி; நெருப்பாக இருந்தாலும் சரி; பூமியாக இருந்தாலும் சரி அனைத்துமே இறைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதிலும் அவனது தூய்மையை எடுத்துரைப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றன**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் எழுதிய கிஷ்தி நூஹ் (நூஹ் நபியின் கப்பல்) என்ற நூலிலிருந்து...**

இவ்வாறே புதிய ஏற்பாட்டில் நீங்கள் உங்களது நற்செயல்களை மக்களுக்கு முன் காட்டுவதற்காக செய்யாதீர்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு மாறாக திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது. நீங்கள் எவ்வேலைகளைச் செய்தாலும் அவற்றை எல்லாம் மக்கள் முன் மறைக்க வேண்டாம். மாறாக, நீங்கள் உங்களது சில நற்செயல்களை மறைப்பதனால் உங்களுக்கும் ஆன்மாவுக்கும் நன்மையுண்டாகும் என்று நினைத்தால் அந்த நன்மையைக் கருத்திற் கொண்டு அவற்றை மறைவாகவே செய்யுங்கள்.

சில செயல்களை வெளிப்படுத்திக் காட்டுவதால் பொது மக்களுக்கு நன்மை விளையும் என்று அறிந்தால் அவற்றை மற்றவர்கள் அறியும்படியாகவே செய்யுங்கள். ஏனென்றால் இதனால் உங்களுக்கு இரு பிரதிபலன்கள் கிடைக்கும். மேலும் நல்ல காரியம் செய்வதற்குத் துணிவு இல்லாத பலவீனர்கள் உங்களைப் பின்பற்றுவதன் மூலம் அவர்களும் அந்த நல்ல காரியத்தைச் செய்யத் துணிவர் என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது. சுருங்கச் சொல்லின் இறைவன் இவ்வாறு கூறியுள்ளான்.

سِرًّا وَّعَلَانِیَةً (13:23) அதாவது தான தர்மங்களை இரகசியமாகவும் வெளிப்படையாகவும் கொடுங்கள் என்று கூறியுள்ளான். இக்கட்டளைகளின் நோக்கத்தையும் அவனே வெளிப்படுத்தியுள்ளான். அதாவது சொல்லைக் கொண்டு மாத்திரம் மக்களை விளங்க வைக்காமல் செயலைக் கொண்டும் மக்களைத் தூண்டுங்கள் என்பதாகும். ஏனெனில் ஒவ்வொர் இடத்திலும் சொல் விளைவை உண்டு பண்ணுவதில்லை. பெரும்பாலான இடங்களில் முன்மாதிரியான செயல்களே பெரும் விளைவுகளை உண்டாக்குகின்றன.

இவ்விதமே நீங்கள் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றால் உங்களது அறைக்குள் செல்லுங்கள் என்று புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டிருக்கின்றது. இதற்கு மாறாக திருக்குர்ஆன் நீங்கள் உங்களது பிரார்த்தனையை எல்லா சந்தர்ப்பங்களிலும் இரகசியமாக செய்ய வேண்டாம் என்றும் மக்கள் முன்னிலையில் உங்கள் சகோதரர்களோடு ஒன்று சேர்ந்தும் வெளிப்படையாகச் செய்ய வலியுறுத்துகிறது. ஏனெனில் ஏதாவது பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டால் அவர்களின் நம்பிக்கை வளர்ச்சி பெறவும் அத்துடன் மற்றவர்களுக்கும் பிரார்த்தனை மீது விருப்பம் ஏற்படவும் காரணமாயிருக்கிறது என்று அது கற்றுத் தருகிறது.

இவ்வாறே புதிய ஏற்பாட்டில் நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது வானத்திலிருக்கும் எங்கள் பிதாவே! உமது நாமம் துதிக்கப்படுவதாக! உமது ஆட்சி உதயமாவதாக! உமது விருப்பம் வானத்தில் இருப்பது போல் பூமியிலும் உண்டாவதாக. எங்களது ஒவ்வொரு நாள் அப்பத்தையும் இன்று எங்களுக்கு தந்தருள்வாயாக! மேலும் எவ்வாறு நாங்கள் எங்களது கடன்காரர்களை மன்னிக்கின்றோமோ அவ்வாறே நீ எங்கள் கடனை எங்களுக்காக மன்னித்தருள்வாயாக! நீ எங்களை சோதனையின் போடாமல் இருப்பாயாக. ஏனெனில் ஆட்சியும் வல்லமையும் மகத்துவமும் எப்பொழுதும், உன்னுடையதாகவே இருக்கின்றன என்று பிரார்த்தனை செய்ய வேண்டும் என வந்திருக்கிறது. ஆனால் திருக்குர்ஆனோ பூமி இறைவனைத் துதிப்பதை விட்டும் விலகி இருக்கவில்லை என்றும் வானத்தில் மட்டுமல்லாமல் பூமியிலும் இறைவனைத் துதித்தல் நடந்து கொண்டே இருக்கிறதென்றும் கூறுகிறது. இறைவன் கூறுகிறான்.

وَاِنۡ مِّنۡ شَیۡءٍ اِلَّا یُسَبِّحُ بِحَمۡدِهٖ

அதாவது வானங்களிலும் பூமியிலும் காணப்படும் ஒவ்வோர் அணுவும் அவனைப் புகழ்ந்து கொண்டும் அவனது தூய்மையை எடுத்துரைத்துக் கொண்டும் இருக்கிறது. (17:45)

یُسَبِّحُ لِلّٰهِ مَا فِی السَّمٰوٰتِ وَمَا فِی الۡاَرۡضِ

அதாவது வானங்களிலுள்ளவையும் பூமியிலுமுள்ளவையும் இறைவனை புகழ்வதிலும் அவனது தூய்மையை எடுத்துரைப்பதிலும் ஈடுபட்டிருக்கின்றன. (62:2)

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ ஸாஅதி (ரலி), மேலும் அபூ சம்லா ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது (ரலி) ஆகிய சஹாபாக்களின் வாழ்க்கை மற்றும் நல்லொழுக்கம் தொடர்பாக ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

## மதிப்பிற்குரிய ராஜா நஸீர் அஹ்மது நாஸிர் சாஹிப் (முன்னாள் நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாது மர்கஸிய்யா ரப்வா) வஃபாத் தொடர்பான அறிவிப்பு மற்றும் கராச்சியைச் சார்ந்த மதிப்பிற்குரிய மஹ்பூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முபீன் அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய லியாகத் அலி சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய முஹம்து ஜஃபருல்லாஹ் சாஹிப் ஆகிய ஷஹீது மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பு

## ஹுஸூர் அவர்கள் இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைத்தார்கள்

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**13 ஜுலை 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **13 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

சஹாபாக்களின் வரிசையில் இன்று நான் இரண்டு சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். அவர்களில் ஒருவர் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ ஸாஅதி (ரலி) ஆவார்கள். ஹஸ்ரத் மாலிக் பின் ரபீஆ அவர்கள் அபூ உஸைது என்ற தனது பட்டப் பெயரால் அவர்கள் பிரசித்தி பெற்றவர்களாவார்கள். சிலர் அன்னாரது பெயரை ஹிலால் பின் ரபீஆ என்று குறிப்பிடுகின்றனர். அன்னார் பனூ ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸாஅதாவோடு தொடர்புடையவர்கள் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 13, அபூ உஸைது ஸாஅதி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 535, பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ உஸைது மாலிக் பின் ரபீஆ அவர்கள் சிறிய உயரத்தை உடைய நபராவார்கள். அவர்களது தலை மற்றும் தாடி முடியும் நரைத்து விட்டிருந்தது. அவர்களது முடி அடர்த்தியாக இருந்தது. முதுமையில் அவர்கள் பார்வையை இழந்திருந்தார்கள். ஹஸ்ரத் முஆவிய்யாவின் காலகட்டத்தில் ஹிஜ்ரி 60 வது ஆண்டில் தனது 75 வது வயதில் அன்னார் வஃபாத்தானார்கள். பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபாக்களில் இறுதியாக அன்னார் தான் வஃபாத்தானார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 536, பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 22, மாலிக் பின் ரபீஆ (ரலி) – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் பத்ர், உஹது, அகழ் மற்றும் அதற்குப் பிறகு நடந்த அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். மக்கா வெற்றியின் போது அன்னாரது கையில் பனூ ஸாஅதா கோத்திரத்தின் கொடி இருந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 286, அபூ உஸைது அஸ் ஸாஅதி, 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸூல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸஹல் பின் ஸஅது (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ உஸைது ஸாஅதி அவர்கள் தமது திருமணத்திற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்தார்கள். அந்த நாளில் அவர்களின் மனைவி நபி (ஸல்) அவர்களுக்கு தொண்டாற்றிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவரே மணப்பெண்ணாகவும் இருந்தார்கள். மிகவும் எளிமையாகத் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருமணத்திற்கான அழைப்பும் செய்யப்பட்டது. மணப்பெண்ணே உணவும் சமைத்து அதை பரிமாறிக் கொண்டும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸஹல் அவர்களே கேள்வி கேட்டுவிட்டு அதற்கான பதிலையும் கூறுகின்றார்கள். இவ்வாறு செய்வது அன்னாரது நடைமுறையாகும்.

ஹஸ்ரத் ஸஹல் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் என்ன குடிக்க கொடுத்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர் பாத்திரத்தில் பேரீச்சம் பழத்தை இரவிலேயே அன்னாருக்காக ஊற வைத்தார்கள். அன்னார் உணவு உண்ட பிறகு அதன் பானத்தை அன்னாருக்கு பருகக் கொடுத்தார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அஷ்ரபா... ஹதீஸ் எண் 5233)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஒரு சந்தர்ப்பத்தில் சில கைதிகள் வந்தனர். அவர்களில் ஒரு பெண்மணி அழுவதை அன்னார் கண்டார்கள். அன்னார் அந்த பெண்மணியிடம் எதற்காக நீங்கள் அழுகின்றீர்கள்? என்று வினவினார்கள்.

அதற்கு அந்த பெண், ஒருவர் பனூ உபைஸிடம் எனது மகனை விற்று என்னையும் எனது குழந்தையையும் பிரித்து விட்டார் என்று கூறினார். நபி (ஸல்) அவர்கள் கைதியின் எஜமானரை அழைத்தார்கள். அழைத்த போதுதான் அவர் அபூ உஸைது ஸாஅதி என்பது தெரிய வந்தது. அன்னார் அவர்களிடம் நீங்கள் இவரையும், இவரது மகனையும் பிரித்து விட்டீர்களா? என்று வினவினார்கள்.

அதற்கு அவர்கள், அந்த குழந்தை நடக்க இயலாததாக இருந்தது. இந்த பெண்ணோ அக்குழந்தையை தூக்குவதற்கு ஆற்றல் இல்லாதவராக இருந்தார். எனவே தான் நான் அந்த குழந்தையை பனூ உபைஸிடம் விற்று விட்டேன் என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்களே சென்று அந்த குழந்தையைப் பெற்று வாருங்கள் என்று கூறினார்கள்.

எனவே அபூ உஸைது அவர்கள் சென்று அந்த குழந்தையை திரும்பப் பெற்றுக் கொண்டு வந்தார்கள். அந்த குழந்தையின் தாயிடம் அக்குழந்தையை ஒப்படைத்தார்கள்.

(ஷர்ஃபுல் முஸ்தஃபா தொகுதி 4 பக்கம் 400.. ஹதீஸ் எண் 1649 – 2003 ஆம் ஆண்டு தாருல் பஷாயிருல் இஸ்லாமியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவளிடம் ஆற்றல் இருந்தாலும் இல்லையென்றாலும் குழந்தையின் காரணமாகத் தாய்க்குத் துன்பம் கொடுக்க முடியாது. அவர் கைதியாகவோ அல்லது அடிமையாகவோ இருந்தாலும் சரியே என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு முறை ஒட்டகம் மற்றும் குதிரை ஆகியவற்றிற்கு ஓட்டப்பந்தயத்தை நடத்தினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது ஒட்டகத்தில் ஹஸ்ரத் பிலால் சவாரி செய்தார்கள். எல்லா ஒட்டகத்தையும் அது முந்திச் சென்று விட்டது.

அவ்வாறே அன்னாரது ஒரு குதிரையும் இருந்தது. அன்னார் குதிரைகளுக்கிடையே ஓட்டப் பந்தயத்தை நடத்தினார்கள். அந்த குதிரையில் ஹஸ்ரத் அபூ உஸைது ஸஅதி அவர்கள் சவாரி செய்தார்கள். அந்த குதிரையும் எல்லாக் குதிரைகளையும் (பின்னுக்குத் தள்ளி) முந்திச் சென்றது.

(அம்தாபுல் அஸ்மாஃ தொகுதி1 பக்கம் 212, ஹிமாயத்துன் நகீஉல் ஹைல் முஸ்லிமீன், 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸஹல் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ உஸைது (ரலி) அவர்களுக்கு முன்ஸிர் பின் அபூ உஸைது அவர்கள் பிறந்த போது அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வரப்பட்டது. அன்னார் அக்குழந்தையை தமது மடியில் அமர வைத்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் அபூ உஸைது அவர்களும் அங்கு அமர்ந்திருந்தார்கள். இதற்கிடையில் நபி (ஸல்) அவர்கள் வேறொரு பணியில் மூழ்கிவிட்டார்கள். அப்போது மக்கள் முன்ஸிர் அவர்களை அன்னாரது மடியிலிருந்து எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அந்தப் பணியை முடித்த பிறகு குழந்தை எங்கே? என்று வினவினார்கள். அதற்கு அபூ உஸைது அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் அவனை வீட்டிற்கு அனுப்பி விட்டோம் என்று கூறினார். அதற்கு அன்னார் அவனுக்கு என்ன பெயர் வைத்துள்ளீர்கள்? என்று வினவினார்கள். அபூ உஸைது அவர்கள் இன்ன பெயர் வைத்துள்ளேன் என்று ஒரு பெயரைக் கூறினார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை; அவனது பெயர் முன்ஸிர் ஆகும் என்று கூறி அவனுக்கு முன்ஸிர் என்று பெயர் வைத்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் அதப், பாபு தஹ்வீலுல் இஸ்ம் இலா இஸ்மே அஹ்ஸன் ஹதீஸ் எண் 6191)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் குழந்தையின் பெயரை முன்ஸிர் என்று வைத்ததற்கு காரணத்தைக் கூறும் போது, ஹஸ்ரத் அபூ உஸைது அவர்களின் சிறிய தந்தையின் மகனின் பெயர் முன்ஸிர் பின் அம்ர் ஆகும். அவர்கள் பேரோ மவூனாவில் ஷஹீதானார்கள். இந்தப் பெயர் தொடர்பின் காரணமாக வைக்கப்பட்டது. அவரும் அன்னாரது சிறந்த பிரதிநிதியாக விளங்க வேண்டும் என்பதற்காக வைக்கப்பட்டது.

(ஃபத்ஹுல் பாரி, ஷரஹ் சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி தொகுதி 7 பக்கம் 497 ஹதீஸ் எண் 4094, கராச்சி ஆராம் பாகிலுள்ள பழைய அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுலைமான் பின் யஸார் அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களது ஷஹாதத்திற்கு முன்பு ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் பார்வையை இழந்தார்கள். கண்கள் பாதிப்படைந்தன. அப்போது அன்னார் இவ்வாறு கூறி வந்தார்கள். அல்லாஹ்விற்கு நன்றி! அந்த இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அருளுக்குரிய காலத்தில் எனக்கு பார்வையை வழங்கியிருந்தான். மேலும் அந்த அனைத்து அருட்களையும் நான் பார்த்தேன். ஆனால் எப்போது அல்லாஹ் மக்களை சோதனையில் போட நினைத்தானோ அப்போது நான் இந்தத் தீய நிலைமைகளைப் பார்க்கக் கூடாது என்பதற்காக எனது பார்வையைப் பறித்து விட்டான்.

(அல் முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 591, கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா, ஹதீஸ் எண் 6189 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் பின் உபைதில்லாஹ் ஹஸ்ரத் ஸாத் பின் அபீ வக்காஸ் அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி), ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி), ஹஸ்ரத் அபூ கதாதா (ரலி), ஹஸ்ரத் அபூ உஸைது ஸஅதி (ரலி) ஆகியோரைப் பார்த்துள்ளேன். இவர்கள் எங்களைக் கடந்து செல்வார்கள். அப்போது நாங்கள் மதரஸாவில் இருப்போம். அப்போது நாங்கள் உபைர் என்ற நறுமணத்தை உணர்ந்தோம். (இது குங்குமப் பூ மற்றும் சில பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படுகின்றது)

(முஸன்னிஃப் இப்னு அபீ ஷய்பா தொகுதி 6 பக்கம் 216, கிதாபுல் அதப்... பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

மர்வான் பின் அல்ஹகம் ஹஸ்ரத் அபூ உஸைது ஸஅதி அவர்களை ஸதகா விநியோகம் செய்வதற்குப் பணியாளராக நியமித்திருந்தார்கள். (அதாவது சதகாவை ஒன்று சேர்க்கவும் அதை விநியோகம் செய்யவும் நியமித்தார்கள்). ஹஸ்ரத் அபூ உஸைது ஸஅதி அவர்கள் கதவுக்கு அருகில் வரும் போது ஒட்டகத்தை அமரச் செய்து அதன் மீது அவர்களிடம் எல்லா பொருட்களையும் கொடுப்பதற்காக வழங்குவார்கள். இந்தப் பொருட்களை கொடுத்து விட்டு இந்த சாட்டை உங்களுடைய பொருளாகும் எனக்கூறி கடைசி பொருளாக அதனை கொடுப்பார்கள்.

ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் ஒரு முறை ஸக்காத்தை விநியோகம் செய்ய வந்தார்கள். இருந்த பொருட்களை எல்லாம் விநியோகம் செய்து சென்று விட்டார்கள். வீட்டிற்குச் சென்று தூங்கி விட்டார்கள். அப்போது கனவில் ஒரு பாம்பு அவர்களது கழுத்தை சூழ்ந்திருப்பதாகப் பார்த்தார்கள்.

அவர்கள் பதற்றமடைந்தவாறு எழுந்தார்கள். அப்போது தனது மனைவியிடம் ஏதாவது பொருள் விநியோகம் செய்யப்படாமல் இருக்கின்றதா? என்று வினவினார்கள். அதற்கு அவர்கள் இல்லை என்று கூறினார்கள்.

அதற்கு அபூ உஸைது அவர்கள், பிறகு ஏன் பாம்பு எனது கழுத்தை சூழ்ந்துள்ளது? ஏதாவது இருக்கின்றதா என்று பாருங்கள் என்று வினவினார்கள். அவர்கள் பார்த்த போது ஒட்டகத்தை கட்டக்கூடிய ஒரு கயிறு இருக்கின்றது என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் அந்த கயிறையும் திரும்பக் கொடுத்து விட்டார்கள்.

(ஷஹுபுல் ஈமான் லில் பைஹக்கி தொகுதி 5 பக்கம் 167 ஹதீஸ் எண் 3247)

அல்லாஹ் இந்த சஹாபாக்களை இறையச்சத்தின் நுட்பமான வழிகளைக் கடைபிடிக்கச் செய்து அமானிதங்களைச் செலுத்துவது தொடர்பான உயர்தரமான முன்மாதிரிகளை நிலைநாட்ட விரும்பினான். இதன் விளைவாகவே கனவுகளிலும் கூட இவர்களுக்கு வழிகாட்டப்பட்டது.

அம்மாரா பின் வஸிய்யா தனது தந்தை கூறிய விஷயத்தை கூறுகின்றார்கள். சில இளைஞர்கள் அபூ உஸைது அவர்களிடம் அன்ஸார் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய மேன்மைகள் தொடர்பாகக் கேட்டார்கள்.

அதற்கு அவர்கள் கூறினார்கள். நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறக் கேட்டுள்ளேன். அதாவது அன்ஸார் கோத்திரத்தைச் சார்ந்தவர்களில் மிகவும் சிறந்தவர்கள் பனூ நஜ்ஜாரைச் சார்ந்தவர்கள் ஆவர். அடுத்து பனூ அப்தில் அஷ்ஹல், அடுத்து பனூ ஹாரிஸ் பின் ஹஸ்ரஜ் பிறகு பனூ ஸாதா ஆகும். அனைத்து அன்ஸார் வீடுகளிலும் அருட்கள் இருக்கின்றன என்று கூறினார்கள்.

அதற்கு பனூ உஸைது அவர்கள், நான் உண்மையைத் தவிர வேறு எதையாவது ஏற்றுக் கொள்பவனாக இருந்தால் நான் பனூ ஸாஅதாவின் ஏதாவதொரு குடும்பத்திலிருந்து ஆரம்பித்திருப்பேன் என்று கூறினார்கள்.

(அல் முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் தொகுதி 3 பக்கம் 592, கிதாப் மஃரூஃபத்துஸ் சஹாபா, ஹதீஸ் எண் 6194 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் வரலாறு தொடர்பாகக் கூறியுள்ளார்கள். அதாவது அரபு நாடு வெற்றி கொள்ளப்பட்ட போது மேலும் இஸ்லாம் பரவ ஆரம்பித்த போது கின்தா கோத்திரத்தைச் சார்ந்த அஸ்மா அல்லது அமீமா என்ற பெயருடைய ஒரு பெண்மணியின் சகோதரரான லுக்மான் என்பவர் தமது சமுதாயத்தின் பிரதிநிதியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்.

அந்தப் பெண்மணி ஜவ்னியா அல்லது பின்துல் ஜவ்ன் என்றும் அழைக்கப்படுகின்றாள். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் தனது சகோதரியின் திருமணத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்ய வேண்டும் என்றும் விரும்பினார். அன்னாரிடமும் அதைப் பற்றிக் கூறினார். அதாவது எனது சகோதரிக்கு இதற்கு முன்பு எனது உறவினருடன் திருமணம் நடைபெற்று விட்டது. இப்போது விதவையாக இருக்கின்றார். அவர் மிகவும் அழகாகவும், திருமணத்திற்குத் தகுதியானவரும் ஆவார். நீங்கள் அவளுடன் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்.

நபி (ஸல்) அவர்கள் அரபு கோத்திரங்களின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு அவரது கூற்றை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் 12.5 அவ்கியா வெள்ளியை மஹராக நிர்ணயித்து நிக்காஹ் நடைபெறும் என்றும் கூறினார்கள். அதற்கு அவர் நாங்கள் கண்ணியமிக்க மற்றும் செல்வமிக்க மக்களாவோம். இந்த மஹ்ர் குறைவாகும் என்று கூறினார்.

அதற்கு அன்னார் நான் எனது எந்த மனைவிக்கும் அல்லது பெண்களுக்கும் இதைவிட அதிகமாக மஹ்ர் தொகையை நிர்ணயித்ததில்லை என்று கூறினார்கள். அதற்கு அவர் சம்மதம் தெரிவித்தார். பிறகு நிக்காஹ் நடத்தப்பட்டது. பிறகு அவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எவரையாவது அனுப்பி உங்களது மனைவியை அழைத்துச் செல்லுங்கள் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இப்பணிக்காக ஹஸ்ரத் அபூ உஸைது அவர்களை நியமித்தார்கள். அவர்கள் சென்றார்கள். ஜோனியா அன்னாரை தமது வீட்டிற்கு அழைத்தார்கள். அப்போது அபூ உஸைது அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களுக்கு பர்தாவிற்கான கட்டளை அருளப்பட்டு விட்டது என்று கூறினார்கள். அதற்கு அவர் மற்ற வழிகாட்டல்களையும் கேட்டறிந்தார். அதற்கேற்ப அவரும் தெரிவித்தார்.

இவ்வாறு ஒட்டகத்தில் அமர்த்தியவாறு அவரை மதீனா அழைத்து வந்தார்கள். பேரீச்சம் மரம் அருகே இருந்த ஒரு வீட்டிற்கு அருகே அவரை இறக்கினார்கள். எந்தப் பெண்ணுக்குத் திருமணம் நடைபெற்றதோ அவர்களுடன் அவர்களுக்கு பாலூட்டிய பெண்ணும் மேலும் உறவினர்களும் இருந்தனர். அவர்கள் வழியனுப்பி வைத்தனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் எழுதுகின்றார்கள்: நமது நாட்டிலும் பணிவிடை செய்யக்கூடிய ஒரு பெண்மணி உடன் செல்வார். செல்வந்தர்கள் இவ்வாறு அனுப்பி வைப்பர். தற்போது இவ்வாறான நடைமுறை இல்லை. முந்தைய காலத்தில் அப்பெண்ணுக்கு எந்த கஷ்டமும் இருக்கக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்து வந்தனர்.

எந்த பெண்ணுக்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் திருமணம் நடைபெற்றதோ அல்லது எந்த பெண்ணின் சம்பந்தத்தை அவரது சகோதரர் கொண்டு வந்தாரோ அந்த பெண் மிகவும் அழகானவள் என பிரபல்யம் அடைந்திருந்தார். அவ்வாறே மற்ற பெண்களுக்கும் மணப்பெண்ணைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். முஹல்லாவிற்கு அருகில் ஏதாவதொரு புதிய மணப்பெண் வந்தால் அவரை பார்ப்பதற்கான ஆர்வம் இருக்கும்.

எனவே மதீனாவின் பெண்கள் அவர்களைப் பார்க்கச் சென்றார்கள். அந்தப் பெண்ணுடைய அழகு பிரபலமாகி இருந்தது. எனவே அந்த பெண்ணின் கூற்றிற்கேற்ப ஒரு பெண் இதனைக் கற்றுக் கொடுத்தார். அதாவது முதல் நாளிலேயே திகிலை ஏற்படுத்துவதுண்டு. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமக்கு அருகில் வரும் போது நீ உம்மிடமிருந்து அல்லாஹ்விடம் நான் அடைக்கலம் வேண்டுகின்றேன் என்று கூறிவிடு. எனவே அவர்கள் உம்மீது அதிக மரியாதை வைத்து விடுவார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்தக் கூற்று அந்த பெண்ணின் கூற்று இல்லையென்றால் ஏதாவதொரு நயவஞ்சகர் தனது மனைவியின் மூலமாக அல்லது தனது உறவினர்கள் மூலமாக இந்த வேலையைச் செய்திருக்கலாம் என்பதில் எந்த ஆச்சரியமுமில்லை.

எவ்வாறிருப்பினும் அந்தப் பெண் வருவது தொடர்பான செய்தி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கிடைத்தது. அன்னார் அந்த பெண்ணுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வீட்டிற்குச் சென்றார்கள்.

நபிமொழிகளில் வருகின்றது: நபி (ஸல்) அவர்கள் அவர்களிடம் சென்ற போது அன்னார் அந்த பெண்ணிடம், நீங்கள் உமது நஃப்ஸை என்னிடம் அர்ப்பணியுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அப்பெண், அரசரின் மனைவி தம்மை ஒரு சாதாரண மனிதரிடம் ஒப்படைப்பாளா? என்று கூறினார்.

அபூ ஸயீது அவர்கள் கூறுகின்றார்கள்: அப்போது நபி (ஸல்) அவர்கள் அப்பெண் முன்பின் அறியாதவர் என்பதனால் பதற்றமடைகின்றார் என்று கருதியவாறு அவளுக்கு ஆறுதல் கூறுவதற்காக அவள் மீது தனது கையை வைத்தார்கள். கையை வைக்கவே செய்தார்கள். அதற்குள்ளே அந்த பெண், நான் உம்மிடமிருந்து அல்லாஹ்வின் அடைக்கலத்தை நாடுகின்றேன் என்ற மிகவும் தவறான ஏற்றுக் கொள்ள இயலாத சொற்களைக் கூறி விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நபி என்பவர் அல்லாஹ்வின் பெயரைக் கேட்டு கண்ணியத்தின் அடிப்படையில் உறைந்து விடுவர். அவனது மகத்துவத்தின் மீது தம்மைத்தாமே மாய்த்து விடுகின்றனர். எனவே அவரது கூற்றினால் நபி (ஸல்) அவர்கள் உடனே கூறினார்கள். நீ ஒரு மிகப்பெரிய இருப்பைப் பற்றி கூறியுள்ளாய். அவனது அடைக்கலத்தை நாடியுள்ளாய். அவன் அடைக்கலம் கொடுப்பதில் மிகப்பெரியவன். எனவே நான் உனது வேண்டுதலை ஏற்றுக் கொள்கின்றேன். எனவே அந்தச் சந்தர்ப்பத்திலேயே நபி (ஸல்) அவர்கள் வெளியேறினார்கள்.

மேலும் கூறினார்கள்: அபூ ஸைதே! அவளுக்கு இரண்டு போர்வையை கொடுங்கள். மேலும் அவளை அவளது வீட்டிலுள்ளவர்களிடம் கொண்டு சேர்த்து விடுங்கள் என்று கூறினார்கள்.

எனவே அதற்குப் பிறகு அன்னார் அவளுக்கு மஹர் தொகை மட்டுமின்றி பரிவு காட்டும் விதத்தில் இரண்டு போர்வையையும் வழங்கவும் கட்டளை பிறப்பித்தார்கள். அன்னார் திருக்குர்ஆனின் கட்டளைக்கிணங்க அதாவது وَلَا تَنْسَوُا الْفَضْلَ بَيْنَكُمْ அதாவது பரிவுடன் நடந்து கொண்டதை மறந்து விடக்கூடாது என்பதற்காக அன்னார் அதிகமாகக் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்.

அபூ ஸைது அவர்களே அவர்களை அவர்களது வீட்டில் விட்டு விட்டு வந்தார்கள். இது அவர்களது கோத்திரத்தைச் சார்ந்தவர்களுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அவர்கள் அவளை ஏசிப் பேசினார்கள். ஆனால் அந்த பெண்ணோ இது எனது நற்பாக்கியமற்றதன் விளைவாகும் என்று கூறினார். சில நேரங்களில் அந்த பெண், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உன்னிடத்தில் வந்தால் நீ விலகி விடு. பகைமையை வெளிப்படுத்து. இவ்வாறு உன்மீதான திகில் அவர் மீது ஏற்பட்டு விடும் என்று என்னைச் சிலர் தூண்டி விட்டுவிட்டார்கள் என்று சில சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

இது தான் காரணமா? அல்லது வேறு ஏதும் காரணமா என்று தெரியவில்லை. எவ்வாறிருப்பினும் அந்தப் பெண் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வெறுப்பைக் காட்டினாள். நபி (ஸல்) அவர்களும் அந்த பெண்ணை விட்டு பிரிந்து சென்றார்கள். மேலும் அவர்களை விடுவித்து விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 533–535, தஃப்ஸீர் சூரா அல் பகரா வசனம் 228)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அவர்கள் பல்வேறு வகையான அழகான பெண்களின் மீது ஈர்ப்புக் கொண்டவராவார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. நவூதுபில்லாஹ். இந்த முழு சம்பவமுமே இதற்கான போதுமான பதிலாக இருக்கின்றது.

ஹஸ்ரத் அபூ ஸைது அவர்கள் கூறுகின்றார்கள். நபி (ஸல்) அவர்களிடம் எப்போது வேண்டுமானாலும் எந்தப் பொருளைக் கேட்டாலும் அன்னார் ஒருபோதும் மறுக்க மாட்டார்கள்.

(மஜ்மவுஸ் ஸவாயித் தொகுதி 8 பக்கம் 409, கிதாபுல் அலாமாதுன் நுபுவ்வத்.. ஹதீஸ் எண் 14179 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது ஆகும். இவரது பெயர் அப்துல்லாஹ் ஆகும். பட்டப்பெயர் அபூ சலமா ஆகும். அன்னாரது தாயின் பெயர் பர்ரா பின்த் அப்தில் முத்தலிப் ஆகும். அன்னார் நபி (ஸல்) அவர்களது பெரியம்மா மகன் ஆவார்.

மேலும் நபி (ஸல்) மற்றும் ஹஸ்ரத் ஹம்ஸா ஆகியோரது பால்குடி சகோதரர் ஆவார். அன்னார் அபூ லஹபின் அடிமைப் பெண்ணான சுவைபாவிடமிருந்து பால் அருந்தியுள்ளார்கள். ஹஸ்ரத் உம்முல் முஃமினீன் உம்மே சலமா அவர்கள் முதலில் அன்னாரைத் திருமணம் செய்திருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 295, அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது (ரலி), பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள்.

அபூ சலமா பின் அப்தில் அஸது நபி (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரர் ஆவார்கள். அவர்கள் பனூ மக்ஸூமைச் சார்ந்தவர்கள் ஆவார். அவர்களது மரணத்தினால் அன்னாரது விதவை மனைவியான உம்மே சல்மா அவர்களுடன் நபி (ஸல்) அவர்களது திருமணம் நடைபெற்றது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 124)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது அவர்கள் இஸ்லாத்தை ஆரம்பத்திலேயே ஏற்றுக் கொண்ட மனிதர்களில் ஒருவர் ஆவார்கள். இப்னு இஸ்ஹாக்கின் கூற்றின் அடிப்படையில் அன்னார் முதல் பத்து நபருக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றார்கள். அதாவது ஆரம்ப கால முஸ்லிம்களைச் சார்ந்தவர் ஆவார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 71 அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது, 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ உபாதா பின் ஹாரிஸ், ஹஸ்ரத் உம்மே சல்மா பின் அப்தில் அஸது, ஹஸரத் அர்கம் பின் அபீ அர்கம் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஃஸூம் நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். நபி (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும்படி அழைப்பு விடுத்தார்கள். மேலும் திருக்குர்ஆனைப் படித்துக் காட்டினார்கள். இதன் மூலமாக இவர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

மேலும் நபி (ஸல்) அவர்கள் நேர்வழியிலும், உண்மையிலும் நிலைபெற்றுள்ளார்கள் என்று சான்று பகன்றார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்தில் அஸது அவர்கள் தமது மனைவியான ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்களுடன் முதல் ஹிஜ்ரத்தான ஹப்ஷாவில் உடன் இருந்தார்கள். ஹப்ஷாவிலிருந்து மக்கா திரும்பி வந்த பிறகு மதீனா ஹிஜ்ரத் செய்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 153, அபூ சலமா (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவர்களது ஹப்ஷா ஹிஜ்ரத் தொடர்பான குறிப்பு இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் உச்சகட்டத்தை எட்டியது. குரைஷிகள் துக்கம் இழைப்பத்தில் முன்னேறிக் கொண்டே சென்றனர்.

அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு கூறினார்கள். மேலும் அபிசீனியாவின் அரசர் நீதியையும், நேர்மையையும் விரும்பக்கூடியவர். அவரது ஆட்சியில் எவர் மீதும் அநீதியிழைக்கப்படாது என்று கூறினார்கள்.

ஹப்ஷா நாட்டை ஆங்கிலத்தில் எத்தியோபியா அல்லது அபிசீனியா என்று அழைக்கப்படுகின்றது. ஆப்ரிக்காவின் வட கிழக்கு பகுதியில் அது அமைந்துள்ளது. பிராந்திய அமைப்பின் அடிப்படையில் தென் அரேபியாவிற்கு முற்றிலும் எதிரே அமைந்துள்ளது. மேலும் செங்கடலுக்கும் இதற்கும் இடையே எந்த நாடும் கிடையாது.

அந்தக் காலத்தில் ஹப்ஷாவில் ஒரு வலுவான கிருத்தவ அரசாங்கம் நிலைபெற்றிருந்தது. அங்குள்ள அரசர் நஜ்ஜாஷி என்று அழைக்கப்பட்டார். இன்னும் சொல்வதென்றால் இன்று வரை அங்குள்ள ஆட்சியாளர்கள் இதே பெயரினால் தான் அழைக்கப்படுகின்றனர்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹப்ஷாவுடன் அரபு நாட்டிற்கு வனிகத் தொடர்பு இருந்தது. எந்த நாட்களைப் பற்றிக் கூறப்படுகிறதோ அந்த நாளில் ஹப்ஷாவின் தலைமையகம் அக்ஸூம் ஆக இருந்தது. தற்போதுள்ள அதுவா நகருக்கு மிக அருகில் அது இருக்கின்றது.

தற்போது வரை அது ஒரு புகழ்பெற்ற நகரமாகவே இருந்து வருகின்றது. அக்ஸூம் அன்றைய நாட்களில் ஒரு வலிமைமிக்க ஆற்றலைப் பெற்றிருந்த அரசாங்கத்தின் தலைமையகமாக இருந்தது. அந்த நேரத்திலிருந்த நஜ்ஜாஷியின் உண்மையான பெயர் அஸ்அமா ஆகும். அவர் நீதியை நிலைநாட்டக்கூடிய அரசராக விளங்கினார்.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட துன்பங்கள் அதன் உச்சத்தை அடைந்த போது நபி (ஸல்) அவர்கள் யாரெல்லாம் ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்ய இயலுமோ அவர்கள் செல்லுங்கள் என்று கூறினார்கள். எனவே அன்னார் கூறியதற்கிணங்க நபித்துவத்தின் 5 வது வருடத்தின் ரஜப் மாதத்தில் 11 ஆண்கள் 4 பெண்கள் ஹப்ஷாவிற்கு ஹிஜ்ரத் செய்தனர்.

அவர்களில் புகழ்பெற்ற நபர்களின் பெயர் இதுவாகும். உஸ்மான் பின் அஃபான். மேலும் அவர்களது மனைவியான ருகிய்யா பின்த் ரஸூலில்லாஹி (ஸல்), அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப், சுபைர் பின் அல்அவாம், அபூ ஹுஸைஃபா பின் மஸ்வூன், மஸ்அப் பின் உமைர், அபூ சல்மா பின் அப்தில் அஸது மற்றும் அவர்களது மனைவியான ஹஸ்ரத் உம்மே சல்மா ஆகியோர் ஆவர்.

வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், ஆரம்ப கால முஹாஜிர்கள் அதிகமான எண்ணிக்கை கொண்ட மக்கள் குரைஷிகளின் வலிமைமிக்க கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். பலவீனமான மக்கள் குறைவாகவே தென்படுகின்றனர். இதிலிருந்து இரண்டு விஷயம் தெளிவாகின்றது. ஒன்று வலிமைமிக்க கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் கூட குரைஷிகளின் அநீதியிலிருந்து பாதுகாப்பாக இருக்கவில்லை.

இரண்டாவதாக, பலவீனமான மக்கள் அதாவது அடிமைகளிடம் ஹிஜ்ரத் செய்வதற்கான ஆற்றல் கூட இருக்கவில்லை. இந்த முஹாஜிர்கள் தெற்கே பயணம் செய்தவாறு ஷுஐபா என்ற இடத்தை அடைந்த போது அது அந்தக் காலத்தில் அரேபியர்களின் ஒரு துறைமுகமாக இருந்தது. அப்போது அல்லாஹ்வின் அருளால் அவர்களுக்கு வணிக கப்பல் கிடைத்தது. அக்கப்பலானது ஹப்ஷாவிற்கு செல்வதற்கு ஆயத்தமாக இருந்தது. எனவே இவர்கள் அனைவரும் நிம்மதியாக அதில் பயணம் செய்தார்கள். கப்பலும் புறப்பட்டது.

குரைஷிகளுக்கு இதனைப்பற்றி தெரிய வந்த போது அவர்கள் மிகவும் கோபமடைந்தார்கள். அவர்களை விட்டுவிடக்கூடாது என்பதற்காகப் பின் தொடர்ந்தார்கள். ஆனால் அவர்கள் சென்று விட்டார்கள். ஆனால் அவர்கள் முஹாஜிரீன்களைப் பின் தொடர்ந்தார்கள். ஆனால் அவர்களைச் சார்ந்தவர்கள் கறைக்கு வந்த சமயத்தில் கப்பல் சென்று விட்டது. எனவே தோல்வியுற்றவாறு அவர்கள் திரும்பிச் சென்றனர். ஹப்ஷாவிற்கு சென்றவுடன் முஸ்லிம்களுக்கு மிகவும் நிம்மதி நிறைந்த வாழ்க்கை அமைந்தது. இறைவனது அருளால் குரைஷிகளின் அநீதிகளிலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்து.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 146–147)

இப்னு இஸ்ஹாக் அவர்கள் எழுதுகின்றார்கள். ஹஸ்ரத் அபூ சல்மா அவர்கள் ஹப்ஷாவிலிருந்து திரும்பி வந்து ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களிடம் அடைக்கலத்தை வேண்டினார்கள். அப்போது பனூ மக்ஸூமைச் சார்ந்த சில நபர்கள் அபூதாலிபிடம் வந்து, நீங்கள் உங்களது சகோதரரின் மகன் முஹம்மது (ஸல்) அவர்களை உங்களது அடைக்கலத்தில் வைத்துள்ளீர்கள். ஆனால் எமது சகோதரரான அபூ சலமாவிற்கு நீங்கள் ஏன் அடைக்கலம் கொடுத்தீர்கள்? என்று கேட்டார்கள்.

அதற்கு அபூ தாலிப் அவர்கள், அவர் என்னிடம் அடைக்கலம் வேண்டினார். மேலும் அவர் எனது மருமகனும் ஆவார். நான் எனது சகோதரரின் மகனுக்கு அடைக்கலம் கொடுத்திருக்கவில்லை என்றால் எனது மருமகனுக்கும் கொடுத்திருக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

அபூ லஹர் அவர்கள் பனூ மக்ஸூம் மக்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள். அதாவது நீங்கள் எப்போதும் எமது கண்ணியத்திற்குரியவரான அபூ தாலிபிற்கு தொல்லை கொடுத்துக் கொண்டே இருக்கின்றீர்கள். மேலும் பலவிதமான கூற்றை கூறுகின்றீர்கள். நீங்கள் இதிலிருந்து விடுபடுங்கள். இல்லையென்றால் நாங்கள் ஒவ்வொரு பணியிலும் அவர் விரும்புவது முழுமையடையும் வரை அவருடன் இருப்போம் என்று கூறினார்கள்.

அதற்கு அம்மக்கள் அபூலஹபிடம், அபூ உத்பாவே! நீ எவற்றை விரும்பவில்லையோ அவற்றிலிருந்து நாங்களும் பின்வாங்கிக் கொள்கின்றோம் என்று கூறினர்.

அபூலஹப் நபி (ஸல்) அவர்களுக்கு எதிராக இருந்த பனூ மக்ஸூமின் நண்பராவார். மேலும் உதவியாளரும் கூட. இதன் விளைவாகவே அவர்கள் அபூ சலமாவைப் பற்றி அதிகமாக அழுத்தம் கொடுப்பத்திலிருந்து பின் வாங்கினர். அபூலஹப் தமக்குச் சாதகமாகப் பேசியதை கேட்ட அபூ தாலிப் அவர்கள் இதர கோத்திரத்தைச் சார்ந்தவர்களைத் தமக்கு உதவி புரிவதிலிருந்து தடுத்து விட்டார்கள். எனவே அவர்கள் சில கவிதை வரிகளைப் படித்தார்கள். அதில் அபூலஹப் மற்றும் நபி (ஸல்) அவர்களுக்கு உதவி செய்வது தொடர்பாகக் கவனமூட்டப்பட்டிருந்தது.

(அல் அஸீரத்துன் நபவிய்யா லா இப்னு ஹிஷாம் பக்கம் 269–270... பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இதனால் எவ்விதத் தாக்கமும் ஏற்படவில்லை. மேலும் எதிர்ப்பும் அதிகரித்துக் கொண்டே சென்றது.

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: உம்முல் முஃமினீன் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். எனது கணவர் ஹஸ்ரத் அபூ சல்மா அவர்கள் மதீனா செல்வதற்கு உறுதியான முடிவை எடுத்தார்கள். மேலும் அதற்காக தமது ஒட்டகத்தை ஆயத்தம் செய்தார்கள். என்னையும் எனது கைக்குழந்தையாக இருந்த மகன் சல்மாவையும் அதில் பயணம் செய்ய வைத்தார்கள். எனவே நாங்கள் சென்றோம். முன்னேறிச் சென்ற போது பனூ மக்ஸூமைச் சார்ந்த சிலர் எங்களை முற்றுகையிட்டனர்.

மேலும் உம்மே சல்மா எங்களது மகளாவாள். அவளை உங்களுடன் அனுப்ப மாட்டோம் என்று கூறினர். ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் எனது கணவரை என்னிடமிருந்து பிரித்து விட்டனர். ஹஸ்ரத் அபூ சல்மா அவர்களின் கோத்திரமான பனூ அப்தில் அஸதைச் சார்ந்த மக்கள் இதன் காரணமாக மிகவும் கோபமடைந்தார்கள்.

எனவே அவர்கள் கூறினார்கள் இந்தக் குழந்தை அபூ சல்மாவுடையதாகும். அதனை நாங்கள் உம்மிடம் கொடுக்க மாட்டோம் என்று கூறினர். அவர்கள் எனது குழந்தையை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். அந்த பெண்ணை அவர்களது கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் வைத்துக் கொண்டார்கள். அந்த குழந்தையை அந்த ஆணின் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் கொண்டு சென்று விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முற்றிலும் தனித்தவளாகி விட்டேன். ஒரு வருடம் வரை இதே துன்பத்தில் நான் பீடிக்கப்பட்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் அப்தா என்ற இடத்திற்கு சென்று அழுதேன். ஒரு நாள் எனது சிறிய தந்தையின் மகன்களில் ஒருவன் நான் அங்கு அழுது கொண்டிருப்பதைக் கண்டான். எனவே என்மீது அவனுக்குக் கருணை ஏற்பட்டது.

அவன் பனூ முகைரா என்ற எனது கோத்திரத்தினரிடம் சென்று, நீங்கள் ஏன் அந்த ஏழைப் பெண்மணியை கொடுமைப்படுத்துகின்றீர்கள். நீங்கள் அவளை அவளுடைய கணவர் மற்றும் குழந்தையிடமிருந்து பிரித்து விட்டீர்கள். அவளை விட்டுவிடுங்கள். அதன் அடிப்படையில் அவர்கள் என்னிடம், நீ உனது கணவரிடம் செல் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா கூறுகின்றார்கள்: இதற்குப் பிறகு எனது மகனை அப்துல் அஸது எனக்கு திருப்பி கொடுத்து விட்டார். பிறகு நான் எனது ஒட்டகத்தை ஆயத்தம் செய்தேன். எனது குழந்தையுடன் அதில் பயணித்தேன். நான் மதீனா சென்ற போது எனக்கு உதவியாளராக யாரும் இருக்கவில்லை. தன்யீம் என்ற இடத்தை நான் அடைந்த போது அங்கு ஹஸ்ரத் உஸ்மான் பின் அபீ தல்ஹாவைக் கண்டேன். (அவர்கள் அந்த நேரத்தில் முஸ்லிமாகவில்லை. ஹிஜ்ரி ஆறாவது ஆண்டில் இஸ்லாத்தைத் தழுவினார்கள்)

அவர் என்னிடம், உம்முடன் யாராவது இருக்கின்றார்களா? என்று வினவினார். அதற்கு நான், இறைவன் மீது ஆணையாக! எனது இந்த மகன் மற்றும் இறைவனைத் தவிர என்னுடன் வேறு யாருமில்லை என்று கூறினேன். அதற்கு உஸ்மான் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உம்மைத் தன்னந்தனியாக ஒருபோதும் செல்ல விடமாட்டேன். நான் உம்முடன் வருகின்றேன். பிறகு அவர்கள் எனது ஒட்டகத்தின் மூக்கில் கட்டப்பட்டிருந்த கயிற்றைப் பிடித்தார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அரபு நாட்டில் இத்தகைய கண்ணியமிக்க ஒரு நபரை பார்த்ததில்லை. சென்று சேர வேண்டிய இடத்தை அடைந்தால் ஒட்டகத்தை உட்கார வைத்து விட்டு அவர்கள் தனியாகச் சென்று விடுவார்கள். பல்வேறு இடங்களில் கூடாரத்தை அமைத்தவாறு நாங்கள் சென்றோம். ஓரிடத்தை அடைந்தால் அவர்கள் ஒட்டகத்தை உட்கார வைத்து விட்டுத் தனியாகச் சென்று விடுவார்கள். நான் எப்போது ஒட்டகத்தை விட்டு இறங்குவேனோ அப்போது அவர்கள் ஒட்டகத்தை மரத்துடன் கட்டுவார்கள். மேலும் தனியாக மரத்திற்கடியில் தூங்குவார்கள்.

புறப்படக்கூடிய நேரம் வந்தால் அவர்கள் ஒட்டகத்தை ஆயத்தம் செய்வார்கள். பிறகு நான் அதில் பயணம் செய்வேன். அவர்கள் ஒட்டகத்தின் மூக்கில் கட்டப்பட்டிருந்த கயிற்றை பிடித்தவாறு நடந்து வருவார்கள். எதுவரை என்றால் நாங்கள் மதீனா சென்றடைந்தோம். ஹஸ்ரத் உஸ்மான் பின் அபீ தல்ஹா அவர்கள் கபா என்ற இடத்தில் பனூ உமர் பின் அஃவ்ப் அவர்களின் ஊரைப் பார்த்தார்கள்.

மேலும் என்னிடம், உம்மே சல்மாவே! உமது கணவர் அபூ சல்மா அவர்கள் இங்கு தான் தங்கியுள்ளார்கள். நீங்கள் இறைவனது அருட்களுடன் இவ்விடத்தில் நுழையுங்கள். இதற்குப் பிறகு உஸ்மான் அவர்கள் மக்கா திரும்பிச் சென்று விட்டார்கள்.

(அல் அஸீரத்துன் நபவிய்யா லா இப்னு ஹிஷாம் பக்கம் 333 ஸிக்ருல் முஹாஜிரீன் இலல் மதீனா, 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

ஹிஜ்ரத்தின் இரண்டாவது ஆண்டில் நபி (ஸல்) அவர்கள் உஷைரா போருக்காக சென்ற போது அபூ சல்மா அவர்களை அமீராக நியமித்தார்கள்.

(அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 71 அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது, 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் அஷீரா போரைப் பற்றி எழுதுகின்றார்கள்:

மக்காவிலுள்ள குரைஷிகளிடமிருந்து ஒரு செய்தியைப் பெற்றுக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் ஒரு படையோடு மதீனாவிலிருந்து சென்றார்கள். மேலும் தமக்குப் பின்னால் தமது பால்குடி சகோதரரான அபூ சல்மா பின் அப்தில் அஸது அவர்களை அமீராக நியமித்தார்கள். இந்தப் போரின் போது நபி (ஸல்) அவர்கள் பல முறை சுற்றி வந்தவாறு இறுதியாக கடற்கரையின் அருகேயுள்ள அஷீரா என்ற இடத்தை அடைந்தார்கள். குரைஷிகளுடன் போர் நடைபெறவில்லை என்றாலும் அன்னார் இதில் பனூ முத்லிஜ் கோத்திரத்தினரோடு அவர்கள் பனூ ஸம்ராவோடு எந்த நிபந்தனையின் அடிப்படையில் உடன்படிக்கை செய்திருந்தார்களோ அதே போன்று ஓர் உடன்படிக்கையை செய்தார்கள். பிறகு மீண்டும் திரும்பிச் சென்று விட்டார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 329)

பனூ ஸம்ராவோடு இந்த நிபந்தனை போடப்பட்டது. அதாவது பனூ ஸம்ராவைச் சார்ந்தவர்கள் முஸ்லிம்களுடன் நட்பு ரீதியான தொடர்பை மேற்கொள்வார்கள். மேலும் முஸ்லிம்களுக்கெதிராக எந்த எதிரிக்கும் அவர்கள் உதவி செய்ய மாட்டார்கள். எப்போது நபி (ஸல்) அவர்கள் அவர்களை முஸ்லிம்களுக்கு உதவி செய்ய வருமாறு அழைத்தாலும் உடனே அவர்கள் வருவார்கள்.

மறுபுறம் அன்னார் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து இந்த உடன்படிக்கையைச் செய்தார்கள். அதாவது முஸ்லிம்கள் பனூ ஸம்ராவுடன் நட்பு ரீதியிலான தொடர்பை வைத்திருப்பார்கள். தேவைப்படும் போது அவர்களுக்கு உதவி புரிவார்கள். இந்த உடன்படிக்கை முறையாக எழுதப்பட்டது. அதில் இரு சாராரும் கையெழுத்திட்டனர்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 1 பக்கம் 133, பாபு ஸிக்ரு பஅஸ ரஸூலுல்லாஹ் (ஸல்)..., 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அச்சிடப்பட்டது)

சீரத் காத்தமுன் நபிய்யீனில் எழுதப்பட்டுள்ளது: உஹது போரில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட தோல்வியின் காரணமாக அரபு நாட்டைச் சார்ந்த கோத்திரங்களிடம் முஸ்லிம்களுக்கு எதிராகத் தலை தூக்குவதற்கு முன்பை விட அதிகமாக துணிச்சல் ஏற்பட்டது. உஹது போர் முடிந்து பல நாட்கள் கூட கழியவில்லை. மேலும் சஹாபாக்கள் தமது காயங்களுக்கு கூட முறையான சிகிச்சை செய்வதிலிருந்து விடுபடவில்லை. ஹிஜ்ரி நான்காவது ஆண்டில் முஹர்ரம் மாதத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு மதீனாவில் ஒரு செய்தி கிடைத்தது.

அதாவது அஸது கோத்திரத்தைச் சார்ந்த தலைவரான துலைஹா பின் ஹுவேலிது மற்றும் அவருடைய சகோதரரான சல்மா பின் ஹுவேலிது ஆகிய இருவரும் தமது பகுதி மக்களை நபி (ஸல்) அவர்களுக்கு எதிராகப் போர் செய்வதற்கு ஆயத்தப்படுத்துகின்றார் என்ற செய்தி கிடைத்தது. இந்த செய்தி கிடைத்ததுமே தமது நாட்டின் சூழ்நிலைக்கேற்ப இப்படிப்பட்ட செய்திகளின் அபாயத்தை அன்னார் நன்றாகவே உணர்ந்திருந்தார்கள்.

இதன் விளைவாக உடனேயே அன்னார் 150 சஹாபாக்களை கொண்ட ஒரு படையை ஆயத்தம் செய்து அவர்களுக்கு அபூ சல்மா பின் அப்தில் அஸதை அமீராக நியமித்தார்கள். மேலும் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தியவாறு செல்லுங்கள். மேலும் பனூ அஸது தமது சூழ்ச்சிகளை நிறைவேற்றுவதற்கு முன்பாகவே அவர்களைச் சிதறடித்து விடுமாறு அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது.

அபூ சல்மா அவர்கள் விரைவாகவும், மௌனமாகவும் முன்னேறிச் சென்று அரபு நாட்டிலுள்ள கதன் என்ற இடத்திலிருந்த பனூ அஸதை அடைந்தார்கள். அவர்களை முற்றுகையிட்டார்கள். ஆனால் எவ்வித போரும் செய்யவில்லை. மாறாக, பனூ அஸதைச் சார்ந்த மக்கள் முஸ்லிம்களைக் கண்ட உடன் இங்கும் அங்கும் சிதறி விட்டனர். மேலும் அபூ சல்மா அவர்கள் சில நாட்களுக்குப் பிறகு மதீனா வந்தடைந்தார்கள்.

இந்தப் பயணத்தில் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டதனால் அபூ சல்மா அவர்களுக்கு உஹது போர்க்களத்தில் ஏற்பட்டிருந்த காயம் குணமாகவில்லை. சிகிச்சை செய்த போதிலும் அது சீர்குலைந்து கொண்டே சென்றது. எனவே

இதன் விளைவாக இறுதியாக இந்த நோயின் காரணமாகவே கலப்பற்ற மற்றும் பழைய மற்றும் நபி (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரரான அந்த சஹாபி மரணமடைந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 511)

அன்னார் அல் யஸீரா கிணற்றின் தண்ணீரினால் குளிப்பாட்டப்பட்டார்கள். அந்த கிணறானது ஆலியா என்ற இடத்தில் பனூ உமைய்யா பின் ஸைது என்பவரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த கிணற்றின் பெயர் அறியாமை காலகட்டத்தில் அல் அபீர் ஆகும். நபி (ஸல்) அவர்கள் அதனை மாற்றி அல் யஸீர் என்று பெயர் வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ சல்மா அவர்கள் மதீனாவில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 128, அபூ சலமா பின் அப்துல் அஸது – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸுல் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ சல்மா அவர்கள் மரணமடைந்த போது அன்னாரது திறந்த கண்களை நபி (ஸல்) அவர்கள் மூடினார்கள். அவர்களது மரணத்திற்குப் பிறகு இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! அபூ சல்மாவுக்கு பாவமன்னிப்பை வழங்குவாயாக. நேர்வழி பெற்ற மக்களில் அவருடைய அந்தஸ்தை உயர்த்துவாயாக. அவருக்குப் பின்னால் அவர் விட்டுச் சென்றவர்களுக்கு நீயே பிரதிநிதியாக இருப்பாயாக. எல்லா உலகங்களின் இறைவனே! அவரையும் எங்களையும் மன்னிப்பாயாக என்று அன்னார் துஆ செய்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ சல்மா அவர்கள் மரணத் தருவாயில் இருந்த அவர்கள், என்னுடைய இறைவா! எனது குடும்பத்தில் எனது பிரதிநிதியாக சிறந்த மனிதரை ஆக்குவாயாக என்று துஆ செய்தார்கள். மேலும் இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மே சல்மாவை திருமணம் செய்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 296, அப்துல்லாஹ் பின் அப்துல் அஸது பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்களின் மகன் கூறுகின்றார்:

ஹஸ்ரத் அபூ சல்மா ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்களிடம் வந்தார்கள். மேலும் கூறினார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடமிருந்து இந்தக் கூற்றை கேட்டுள்ளேன். அன்னார் கூறினார்கள் எந்த நபருக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் அவர் إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ என்று கூறிவிட்டு அல்லாஹ்வே! நான் இந்த துன்பத்திற்குப் பகரமாக உன்னிடமே அதற்குரிய கூலியை வேண்டுகின்றேன். அல்லாஹ்வே! எனக்கு இதற்குப் பகரமாக வேறொன்றை வழங்குவாயாக என்று கூற வேண்டும் என்று அன்னார் கூறியவாறு அவ்வாறு கேட்டால் இறைவன் அதை அவருக்கு வழங்கி விடுவான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உம்மே சல்மா அவர்கள் கூறுகின்றார்கள்:

அபூ சல்மா அவர்கள் ஷஹீதான போது நான் இந்த துஆவைச் செய்தேன். ஆனால் எனது உள்ளம் இந்த துஆவை செய்ய விரும்பவில்லை. அதாவது ஹஸ்ரத் அபூ சல்மா அவர்களுக்குப் பகரமாக இன்னொன்றை வழங்கு என்று நான் துஆ செய்ய விரும்பவில்லை. எனவே நான் அபூ சல்மாவை விட யார் மிகச் சிறந்தவராக இருக்க முடியும். அவர் அப்படிப்பட்டவர் அல்ல; அவர் அப்படிப்பட்டவர் அல்ல அதாவது அவர் இந்த இந்த நற்பண்புகளுக்கு சொந்தக்காரர் ஆவார் என்று கூறியவாறு இந்த துஆவையும் நான் செய்தேன்.

ஹஸ்ரத் உம்மே சல்மாவின் இத்தா காலம் பூர்த்தியான போது நபி (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து நிக்காஹ்விற்கான செய்தி வந்தது. மேலும் நபி (ஸல்) அவர்கள் அவர்களுடன் திருமணம் செய்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 5 பக்கம் 132 – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குத்புல் இல்மியாவில் அச்சிடப்பட்டது)

திருமணம் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்.

ஹிஜ்ரி 4 வது ஆண்டில் ஷவ்வால் மாதத்தில் நபி (ஸல்) அவர்கள் உம்மே சல்மாவோடு திருமணம் செய்தார்கள். உம்மே சல்மா அவர்கள் குரைஷிகளின் கண்ணியமிக்க ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இதற்கு முன்பு அபூ சல்மா பின் அப்தில் அஸது அவர்களுடன் இருந்தார்கள். அவர்கள் மிகவும் பரிசுத்தமான மற்றும் பழைய சஹாபி ஆவார்கள்.

மேலும் அவர்கள் எந்த ஆண்டு மரணமடைந்தார்கள் என்றால் அந்த ஆண்டு தான் இத்தா தொடர்பான திருக்குர்ஆனின் சட்டம் இறங்கியது. (இந்த இஸ்லாமிய சட்டத்தின் அடிப்படையில் ஒரு விதவைப் பெண்அல்லது தலாக் கொடுக்கப்பட்ட பெண் அந்த நாட்களைக் கழிப்பது மிக அவசியமாகும். அதற்கு முன்பாக அந்த பெண் திருமணம் செய்ய முடியாது.) அந்த தருணத்தில் தான் அன்னாரது வஃபாத் நிகழ்ந்தது.

அன்னார் இத்தாவை கழித்தார்கள். அவர்கள் மிகவும் புரியும் திறன் கொண்ட திறமை வாய்ந்த பெண்மணி ஆவார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரை மணமுடிக்க விரும்பினார்கள். ஆனால் உம்மே சல்மா அவர்கள் நிராகரித்து விட்டார்கள். இறுதியாக நபி (ஸல்) அவர்கள் அவரைத் திருமணம் செய்ய எண்ணினார்கள்.

அதற்கான ஒரு காரணம் என்னவென்றால், உம்மே சல்மா அவர்களிடம் இருந்த தனிப்பட்ட சிறப்பம்சங்களினால் அவர்கள் ஒரு ஷரீஅத்துடைய நபியின் மனைவி ஆவதற்கான தகுதி அவர்களிடம் இருந்தது. அதுமட்டுமின்றி அவர்கள் ஓர் உயர்ந்த மற்றும் பழைய சஹாபியின் விதவை மனைவியாவார்கள். மேலும் குழந்தைகளும் அவர்களுக்கு இருந்தன. இதன் விளைவாக அவர்களுக்கு ஒரு சிறப்பான ஏற்பாடு செய்வதும் அவசியமானதாக இருந்தது.

அதுமட்டுமல்லாமல் அபூ சல்மா பின் அப்தில் அஸது நபி (ஸல்) அவர்களது பால்குடி சகோதரர் ஆவார். இதன் விளைவாக நபி (ஸல்) அவர்களுக்கு அவர்களது குடும்பத்தைப் பற்றிய குறிப்பான கவனம் இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும் நபி (ஸல்) அவர்கள் உம்மே சல்மாவிற்குத் திருமணத்திற்கான தூதுச் செய்தியை அனுப்பினார்கள். முதலில் உம்மே சல்மா அவர்கள் தமது சில தனிப்பட்ட காரணங்களினால் யோசித்தார்கள்.

மேலும் எனது வயது இப்போது மிகவும் அதிகமாகி விட்டது. நான் குழந்தையை பெற்றெடுப்பதற்குத் தகுதியற்றவளாக ஆகி விட்டேன் என்ற காரணத்தையும் அவர்கள் கூறினார்கள். ஆனால் நபி (ஸல்) அவர்களது நோக்கமோ வேறொன்றாக இருந்தது. இறுதியாக அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தரப்பிலிருந்து அவர்களது மகன் தாய்க்கு காப்பாளராக இருந்து நபி (ஸல்) அவர்களோடு திருமணம் செய்து வைத்தார்.

உம்மே சல்மா அவர்கள் ஒரு சிறப்பான உயர்தரமான பெண்மணி. மற்றும் புரியும் திறன் மட்டுமின்றி நம்பிக்கையிலும், நிச்சய உறுதியிலும் ஒரு உயர்தரமான அந்தஸ்தைப் பெற்றிருந்தார்கள் என்று கூறியிருந்தேன். மேலும் அவர்கள் நபி (ஸல்) அவர்களது கட்டளைக்கிணங்க ஹப்ஷாவுக்கு ஹிஜ்ரத் செய்தவர்களில் ஒருவராவார்கள். அதுமட்டுமின்றி மதீனா ஹிஜ்ரத் செய்த போதும் எல்லாப் பெண்களை விடவும் முதன்மையானவர்களாக அவர்கள்

விளங்கினார்கள். உம்மே சல்மா அவர்களுக்குப் படிக்கவும் தெரியும். மேலும் முஸ்லிம் பெண்களின் தஃலீம் மற்றும் தர்பிய்யத்தில் அவர்கள் மிகச் சிறந்த பங்கை வழங்கியுள்ளார்கள்.

ஹதீஸ் நூல்களில் அவர்கள் தரப்பிலிருந்து பல அறிவிப்புகளும் ஹதீஸ்களும் இடம் பெற்றுள்ளன. நபி (ஸல்) அவர்களது மனைவிமார்களின் வரிசையில் அன்னார் இரண்டாவது இடத்தையும் சஹாபாக்களில் 12 வது இடத்தையும் பெற்றிருந்தார்கள்.

ஆக இது தான் சஹாபாக்கள் பற்றிய குறிப்பாகும். அல்லாஹ் இந்த சஹாபாக்களுக்கு உயர்ந்த படித்தரத்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக. மேலும் நமக்கும் அவர்களது நன்மைகளைச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களால் எழுதப்பட்ட சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல், பக்கம் 530–531)

இப்போது நான் வஃபாத்தான சிலரது அறிவிப்பைச் செய்வேன். தொழுகைக்குப் பிறகு அவர்களது ஜனாஸா தொழுகையைத் தொழ வைப்பேன்.

இவர்களில் முதலாவது நபர், வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய ராஜா நஸீர் அஹ்மது சாஹிப் நாஸிர் ஆவார். அன்னார் முரப்பி ஆவார். முன்னாள் நாஸிர் இஸ்லாயோ இர்ஷாதாகவும் தொண்டாற்றியுள்ளார்கள். ஜுலை 6 ஆம் தேதி காலை 11 மணி அளவில் தமது 80 வது வயதில் அன்னார் தாஹிர் ஹார்ட் இன்ஸ்டிடியூட்டில் வஃபாத்தானார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

பல வருடங்களாக அவர்கள் நோயுற்றிருந்தார்கள். 2012 லிருந்த அன்னாரது உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமாக மோசமாக ஆரம்பித்தது. மூளையில் ஏற்பட்ட இரத்த அழுத்தத்தின் காரணமாக கடந்த கடந்த மூன்று மாதங்களாக முழுவதுமாக அன்னார் கட்டிலிலேயே இருந்தார்கள்.

அன்னார் 1938 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி சர்கோதா மாவட்டத்திலுள்ள பேரா என்ற இடத்தில் பிறந்தார்கள். ஆரம்ப வகுப்புகளை முடித்தார்கள். மெட்ரிக்கும் முடித்தார்கள். அதற்குப் பிறகு விவசாயத் துறை சம்பந்தப்பட்ட ஓர் அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணி செய்ய ஆரம்பித்தார்கள். 1958 ஆம் ஆண்டு அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள். ஜாமிஆவில் சேர்ந்தார்கள். 1965 ஆம் ஆண்டு ஷாஹிது பட்டம் பெற்றார்கள்.

அஹ்மதிய்யத் அவர்களது குடும்பத்தில் அவர்களது தந்தையான மதிப்பிற்குரிய ராஜா குலாம் ஹைதர் சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. அவர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடத்தில் பைஅத் செய்தார்கள். பிறகு அவர்கள் தமது பெற்றோர்களிடமும், சகோதர, சகோதரிகளிடமும் பைஅத் வாங்கினார்கள். ராஜா நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களது தந்தையின் விருப்பம் என்னவென்றால், அவர்களது ஒரு மகன் வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்பதாக இருந்தது. தனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் ராஜா சாஹிப் 1958 ஆம் ஆண்டு வக்ஃபே ஸிந்தகி படிவத்தைப் பூர்த்தி செய்தார்கள்.

மேலும் தனது மூத்த சகோதரர் ராஜா நஸீர் சாஹிப் மற்றும் மர்ஹூம் ஜஃபர் சாஹிபிடம் கையெழுத்திடுவதற்காக எடுத்துச் சென்றார்கள். அவர்களது சகோதரர்கள் அன்னாரிடத்தில் நன்றாக யோசித்து முடிவு செய். இது மிகவும் கடினமான பணியாகும். கடுமையாக முயற்சி செய்ய வேண்டியது வரும். மேலும் வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்பது மிகப்பெரிய பொறுப்பாகும் என்று கூறினார்கள்.

ஆனால் அன்னார் தமது சகோதரர்களிடம், நான் நன்றாக யோசித்து விட்டேன். நீங்கள் கையொப்பம் இடுங்கள் என்று கூறினார்கள். அவர்களது தந்தை முன்பே வஃபாத்தாகி விட்டார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் வக்ஃப் செய்தார்கள். நான் கூறியது போன்று ஜாமிஆவில் இணைந்தார்கள். மேலும் படித்து முடித்து மைதானத்திற்கு வந்தார்கள். ஜாமிஆவில் படிப்பை முடித்த பிறகு 47 வருடங்கள் வரை அன்னார் ஜமாஅத்திற்குத் தொண்டாற்றியுள்ளார்கள்.

பாகிஸ்தானில் பல்வேறு இடங்களில் முரப்பியாகத் தொண்டாற்றியுள்ளார்கள். பங்களாதேஷும் பாகிஸ்தானும் ஒன்றாக இருந்த போது பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியாக பங்களாதேஷிலும் அல்லது கிழக்கு பாகிஸ்தானில் அன்னார் முரப்பியாகத் தொண்டாற்றியுள்ளார்கள். யுகண்டாவிலும் அன்னார் முபல்லிக்காக தொண்டாற்றியுள்ளார்கள். இந்தோனேஷியாவிலும் இருந்துள்ளார்கள். இரண்டு வருடங்கள் ஜாமிஆவில் ஆசிரியராக தொண்டாற்றக்கூடிய நற்பேற்றைப் பெற்றிருந்தார்கள்.

பிறகு சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவில் நாயிப் நாஸிராகவும் இருந்துள்ளார்கள். அதற்குப் பிறகு பத்து வருடங்கள் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யாவாகத் தொண்டு செய்துள்ளார்கள். இரண்டு வருடங்கள் அடிஷ்னல் நாஸிர் ரிஷ்தா நாதாவாகவும், இரண்டு வருடங்கள் அடிஷ்னல் நாஸிர் இஷாஅத்தாகவும் தொண்டு செய்வதற்கான நற்பேற்றைப் பெற்றுள்ளார்கள். 2012 ல் அன்னார் ஓய்வு பெற்றார்கள்.

அவர்களது மனைவி அன்னாரது வாழ்நாட்களிலேயே வஃபாத்தாகி விட்டார்கள். மூன்று மகன்கள் இருக்கின்றனர். ராஜா முஹம்மது சாஹிப் லண்டனில் இருக்கின்றார்கள். ராஜா அதாவுல் மன்னான் சாஹிப் வகாலத் தஸ்னீஃப் ரப்வாவில் முரப்பி ஆவார்கள். மேலும் ராஜா முஹம்மது அக்பர் அவர்கள் இங்கிலாந்தில் தான் இருக்கின்றார்கள். இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொண்ட நபராகவும், துஆ செய்யும் நபராகவும் அன்னார் விளங்கினார்கள்.

அவர்களது மகன் எழுதுகின்றார்கள்: அன்னார் பங்களாதேஷில் இருந்த போது ஒரு முறை தீப்பற்றியது. அஹ்மதிகள் வீடு வரை தீ சென்றடைந்தது. அப்போது அன்னார் இவ்வாறு துஆ செய்தார்கள்.

அல்லாஹ்வே! உனது வாக்களிக்கப்பட்ட மஸீஹ் நெருப்பு நமது அடிமையாகும். மாறாக, அடிமைகளுக்கெல்லாம் அடிமையாகும் என்று கூறியுள்ளார்கள். எனவே நீ இந்த நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக என்று துஆச் செய்தார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நெருப்பு அந்த வீடு வரை வந்தது. அந்த வீட்டின் ஒரு ஓரம் வரை அது வந்தது. பின்னர் அந்த தீ அணைந்து விட்டது. மேலும் இவ்வாறு அஹ்மதிகளின் வீடும் இழப்பிலிருந்து தப்பித்து விட்டது.

யுகண்டாவில் அன்னார் இருந்த போது உள்நாட்டுப் போரினால் நிலைமைகள் மிகவும் மோசமானது. இருந்த போதிலும் அன்னார் தப்லீக்கிற்காகச் சென்றார்கள்.

ஒரு முறை தப்லீக்கிற்காகச் செல்லும் போது அங்கு நடைபெற்ற சம்பவமாகும். அதாவது தப்லீக்கிற்குக் காலையிலேயே சென்று விடுவார்கள். மாலையில் திரும்பி வருவார்கள். அங்கு தங்குவதற்கு எந்த இடமும் இருக்கவில்லை. அருகிலுள்ள இடங்களுக்கே செல்ல முடியும். அப்போது ஜமாஅத் இஸ்லாமி ஜமாஅத்தைச் சார்ந்த ஒரு நபர் வந்தார். அவர் அன்னாரை தப்லீக் ஜமாஅத்தைச் சார்ந்தவர் என்று கருதியவாறு இவ்வாறு கூறினார். அதாவது என்னிடம் ஒரு வண்டி இருக்கின்றது. தாங்கள் அதனை 1400 டாலருக்கு வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

இறுதியாக 1150 டாலருக்கு வாங்குவதாக முடிவானது. ஜமாஅத்தின் பொருளாதார நிலையும் வண்டி வாங்குவதற்கான

சூழ்நிலையில் இல்லாமல் இருந்தது. ராஜா சாஹிப் அவர்களது நிலையும் வண்டி வாங்கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. அன்னார் அல்லாஹ்விடம், அல்லாஹ்வே நீ பணத்திற்கான ஏற்பாட்டைச் செய்வாயாக. அதன் மூலமாக நான் வண்டி வாங்க வேண்டும் என்று துஆ செய்தார்கள்.

அந்த துஆவும் கூட அன்னார் இதனால் தான் செய்தார்கள். அதாவது தனது அடுப்பையும், கட்டிலையும் வண்டியில் வைத்து தப்லீக்கிற்காக நான் செல்ல வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: தப்லீக்கிலும் மிக அதிகமான கஷ்டங்கள் இருந்தன. வண்டி வாங்குவதாகப் பேசியும் முடிக்கப்பட்டது. பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் சிறிதே எஞ்சியிருந்தது. கூறுகின்றார்கள். நான் ஒரு நாள் போஸ்ட் பாக்ஸை திறந்தேன். அதில் ஒரு கடிதம் இருந்தது. கனடாவிலிருந்து அந்த கடிதம் வந்திருந்தது. அவர்களது ஒரு உறவினரான சகோதரர் அதை எழுதியிருந்தார்.

அதில், நான் இரவில் கனவு கண்டேன். தாங்களுக்கு 1150 டாலர் தேவைப்படுகிறது. உங்களுக்கு ஏன் தேவைப்படுகிறது என்று எனக்குத் தெரியாது. ஆனால் எவ்வாறிருப்பினும் நான் உங்களுக்கு அந்தப் பணத்தை அனுப்புகின்றேன் என்று எழுதப்பட்டிருந்தது. அத்துடன் 1150 ரூபாய்க்கான காசோலையும் இருந்தது.

துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட இவ்வாறான பல சம்பவங்கள் உள்ளன. திருக்குர்ஆனை ஓதுவது அன்னாருக்கு மிகவும் பிடித்தமானது.

அவர்கள் எழுதுகின்றார்கள்: எனது தந்தைக்கு காற்று மண்டலத்திலும் சரி; தண்ணீரிலும் சரி திருக்குர்ஆனை ஓதி முடிக்க மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள். பல முறை கடல் பயணத்தில் அன்னார் திருக்குர்ஆனை ஓதி முடிப்பதற்கான நற்பேற்றைப் பெற்றுள்ளார்கள். விமானப் பயணத்தில் நீண்ட தூரம் பயணம் செய்ய நேரிடாது. ஆனாலும் பயணத்தில் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு ஓதி வந்தார்கள்.

அவர்களது மகனான வாழ்க்கையை அர்ப்பணித்த மதிப்பிற்குரிய ராஜா அதாவுல் மன்னான் சாஹிப் முரப்பி வகாலத்தே தஸ்னீஃபில் தொண்டாற்றி வருகின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எனது தந்தை எப்போதும் இரண்டு போதனைகளையே வழங்கி வந்தார்கள். ஒன்று, ஒருபோதும் ஷிர்க் செய்யக் கூடாது. இரண்டாவது, எல்லா நிலைமையிலும் அஹ்மதிய்யா கிலாஃபத்தோடு ஒன்றியிருக்க வேண்டும். மேலும் அவர்களும் இந்த விஷயத்தின் அடிப்படையில் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்கள்.

அவர்களுடைய சகோதர் அன்னார் பெற்றோர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்ததைப் பற்றி அன்னாரது நிலையை இவ்வாறு எழுதுகின்றார்கள்:

எனது தாய் ஒரு விஷயத்தைப் பல முறை கூறினாலும் ஒவ்வொரு முறை கூறும் போது அந்த விஷயத்தை முதல் தடவை கேட்பது போன்று அன்னார் கேட்பார்கள். ஒருபோதும் இதை தாங்கள் இதற்கு முன்பு கூறிவிட்டீர்கள் என்று கூறியது கிடையாது.

அவர்களுடைய மருமகள் எழுதுகின்றார்கள்:

18 வருடமாக எனக்கு இந்த வீட்டில் மாமனார் மற்றும் மாமியார் அதிகமாக கண்ணியம் வழங்கி வந்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் தமது மருமகளிடமும் கூட அன்பு செலுத்தி வந்தார்கள்.

மேலும் கூறுகின்றார்கள். நான் அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் கலீஃபாக்கள் மீது அளப்பற்ற அன்பு செலுத்தக் கூடியவர்களாக விளங்கினார்கள். கிலாஃபத்தோடு கலப்பற்ற அன்பு கொண்டிருந்தார்கள்.

அவர்களது இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால் அவர்கள் ஒவ்வொரு மாதமும் திருக்குர்ஆனை ஓதி முடித்து வந்தார்கள்.

அவர்களது உறவினர்களும் கூட எழுதியுள்ளார்கள். அதாவது அல்லாஹ் அவர்களது தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்து வந்தான் என்பதை நாங்கள் பார்த்துள்ளோம். மேலும் அவர்களது துஆவை அல்லாஹ் வியக்கத்தக்க முறையில் கேட்டுள்ளதையும் நாங்கள் கண்டுள்ளோம்.

எவ்வாறிருப்பினும் ஒரு வெற்றிகரமான முரப்பி ஆவார். கிலாஃபத்தோடு அவர்களுக்கு இருந்த தொடர்பானது ஒரு முன்மாதிரியாகும். அவர்களைப் பற்றி இவ்வாறும் கூறலாம். அதாவது உயிர் நாடி எவ்வாறு செயல்படுகிறதோ அவ்வாறே அவர்கள் கிலாஃபத்தோடு செல்வார்கள். அன்னாரது உடலும் உயிரும் கிலாஃபத்தோடு தொடர்பு வைத்திருந்தது.

பாகிஸ்தானில் என்னை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நாஸிர் ஆலாவாக நியமித்த போது அந்த சமயத்தில் கட்டுப்படுதலின் ஒரு முன்மாதிரியை நான் அவர்களிடம் கண்டேன். அவர்கள் அவ்வாறு கட்டுப்பட காரணம் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை நியமித்துள்ளார்கள். மேலும் அவர்களின் பிரதிநிதி ஆவார்கள். எனவே அவர்களுக்குக் கட்டுப்பட்டும் நடக்க வேண்டும்.

எவ்வாறிருப்பினும் அவர் கட்டுப்பட்டு நடப்பதில் ஒரு முன்மாதிரியாவார். அவ்வாறானவர்கள் மிகக் குறைவாகவே உலகத்தில் தென்படுவர். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்களது சந்ததிகளுக்கும் அவர்கள் விட்டுச் சென்ற நன்மையைத் தொடரச் செய்வதற்கான நற்பேற்றை வழங்குவானாக. பல்வேறு நற்பண்புகளுக்கு உரிமை படைத்தவர் ஆவார். ஏழைகளின் தேவையைக் கருத்தில் கொள்பவர் ஆவார்.

எந்த முரப்பிகள் அவர்களுன் தொண்டாற்றியுள்ளார்களோ அந்த முரப்பிகளின் தேவைகளை கருத்தில் கொள்பவர். மேலும் அதனை முழுமை செய்ய முயற்சி செய்யக்கூடியவர் ஆவார்கள். அதிகமான முரப்பிகள் எனக்கு எழுதவும் செய்துள்ளனர்.

இது மட்டுமின்றி இரண்டு ஷஹீதுகளின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். ஜமாஅத்தின் காரணமாக இந்த ஷஹாதத் நடைபெறவில்லை என்றாலும் இவர்களது இரண்டு கடைகளில் கொள்ளையர்கள் திருட முற்பட்டனர். கொள்ளையர்கள் சுட்டு இவர்களை ஷஹீதாக்கினார்கள்.

அவர்களில் ஒருவர் மஹ்பூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான ஷஹீது முபீன் அஹ்மது சாஹிப் ஆவார்கள். இரண்டாவது நபர் இப்னு லியாகத் அலி சாஹிப் அவர்களின் மகனான முஹம்மது ஜஃபருல்லாஹ் சாஹிப் ஆவார்கள்.

ஜூலை 7, 2018 அன்று ஏறக்குறைய மதியம் 3 மணி அளவில் கராச்சியிலுள்ள வேடா சோக் என்ற இடத்தில் கொள்ளையர்கள் மஹ்பூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான முபீன் அஹ்மது சாஹிப் அவர்களும் இப்னு லியாகத் அலி சாஹிப் அவர்களின் மகனான முஹம்மது ஜஃபருல்லாஹ் சாஹிப் மற்றும் முஹம்மது நஸருல்லாஹ் சாஹிப் ஆகிய மூன்று அஹ்மதி குத்தாம்களின் மீது சுட்டார்கள்.

அவர்களில் முபீன் அஹ்மது சாஹிப் மற்றும் ஜஃபருல்லாஹ் சாஹிப் ஷஹீதானார்கள். இவர்களது கடைக்கு அவர்கள் வந்திருந்தார்கள். எலக்ட்ரானிக்ஸ் கடை நடத்தி வந்தார்கள். அங்கே அவர்களை சுட்டு கொள்ளையர்கள் ஷஹீதாக்கி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மஹ்பூப் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனான ஷஹீது முபீன் அஹ்மது சாஹிப் அவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் அவர்களின் தந்தை வழி பாட்டனாரான மதிப்பிற்குரிய சவுத்ரி அலா தாத் சாஹிப் மூலமாக ஏற்பட்டது. அவர்கள் 1940 ஆம் ஆண்டு தனது மூத்த சகோதரரான அப்துல் அஸீஹ் பட்வாரி சாஹிப் மூலமாக பைஅத் செய்தார்கள். இதற்குப் பிறகு அவர்களது மகன்கள் எதிர்த்தனர். வீட்டில் அவரது இருப்பிடத்தையும், கட்டில், பாத்திரங்கள் இவை அனைத்தையும் தனியாக வைத்தார்கள். ஆனால் அவர்கள் பொறுமையுடன் அதனைக் கையாண்டார்கள்.

ஷஹீது மர்ஹூம் அவர்களின் தந்தை வழி பாட்டனாரான மதிப்பிற்குரிய அலி முஹம்மது சாஹிப் ஜமாஅத்தைக் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். மேலும் அஹ்மதிய்யத்தின் எதிரியான அதாவுல்லாஹ் ஷா புகாரியின் முரீது ஆவார். கடுமையான எதிரியாவார். நாட்டுப் பிரிவினையின் போது முஹம்மது அலி ஜின்னாவிற்கு எதிராக அதாவுல்லாஹ் ஷா புகாரி, அவர் காஃபிராவார் என்பன போன்ற கீழ்த்தரமான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். மேலும் முஸ்லிம் லீக்கிற்கு எதிராகப் பேசினார். இதன் விளைவாக அவருடைய தாதா அவரை விட்டுப் பிரிந்தார்.

பிறகு இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது ஜமாஅத் ஹிஜ்ரத் செய்து லாஹூர் வந்தது. அப்போது அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் செய்திருந்த முன்னறிவிப்புகள் முழுமையாவதைக் கண்டார்கள். இதனால் மீண்டும் அவர்களுக்கு ஜமாஅத்தின் மீது கவனம் ஏற்பட்டது. பாகிஸ்தான் நிறுவப்பட்ட பிறகு இந்த குடும்பம் நவா பஷாவிற்கு இடம் பெயர்ந்தது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சிந்திற்கு சுற்றுப் பயணம் வந்திருந்திருந்த போது ஷஹீது மர்ஹூமின் தாத்தா ரயில்வே ஷ்டேஷனில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைச் சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றார்கள். ஹுஸூர் அவர்களின் முகத்தைக் கண்டு இந்த முகம் நிச்சயமாக ஒரு பொய்யருடைய முகமாக இருக்க முடியாது என்று கூறி பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்தார்.

முபீன் அஹ்மது சாஹிப் B.A படித்துக் கொண்டிருந்தார்கள். ஷஹாதத் நடைபெற்ற போது அன்னாரது வயது 25 ஆகும். முபீன் அஹ்மது சிறந்த நற்குணங்களுக்கு உரிமை படைத்தவர். சிறந்த இளைஞராவார். முபீன் அஹ்மது சாஹிப் ஐவேளை தொழுகையை முறையாக பேணக் கூடியவர். வீட்டில் அனைவருடனும் அன்புடன் நடந்து கொள்வார். ஷஹீது மர்ஹூம் ஜமாஅத் பணிகளில் அதிகமாக பங்கெடுக்கும் ஒரு காதிமாவார்.

ஜமாஅத் பணிக்காக தமது சொந்தப் பணிவை விட வேண்டியது வந்தாலும் அதற்காகக் கவலைப்பட மாட்டார். ஷஹீது மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார். மிஸல் நம்பரும் வந்து விட்டது. இன்ஷா அல்லாஹ் அவரது வஸிய்யத்தும் ஏற்றுக் கொள்ளப்படும். முஹல்லாவைச் சார்ந்தவர்களிடமும் நட்பு ரீதியிலான தொடர்பை வைத்திருந்தார்கள். வரக்கூடிய ஒவ்வொரு பெரிய சிறிய நபர்களும் அன்னாரை புகழ்ந்து கூறியுள்ளார்கள். முபீன் சாஹிப் இந்த சந்தர்ப்பத்திலேயே ஷஹீதான முஹம்மது ஜஃபருல்லாஹ் சாஹிப் அவர்களது உறவினர் ஆவார்கள்.

அன்னாரது குடும்பத்தில் அவர்களுடைய தந்தை மதிப்பிற்குரிய மஹ்பூப் அஹ்மது சாஹிப், தாயார் மதிப்பிற்குரிய அமத்துல் ஹபீழ் பேகம் சாஹிபா மட்டுமின்றி 23 வயதுமிக்க மபீனா மஹ்பூப், 16 வயதுமிக்க கன்ஸா மஹ்பூப் என்ற இரு சகோதரிகளும், அமீன் அஹ்மது என்ற 13 வயதையுடைய ஒரு சகோதரரும் இருக்கின்றார்கள்.

இரண்டாவது லியாகத் அலி சாஹிப் அவர்களது மகனான ஷஹீது மதிப்பிற்குரிய ஜஃபருல்லாஹ் சாஹிப் அவர்களுடையதாகும். அவர்களுக்கு அப்போது மூன்று குண்டுகள் பட்டது. அதன் மூலமாக அவர்களது இரண்டு சிறுநீரகத்திலும் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. அவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆபரேஷன் நல்ல முறையில் முடிந்தது. ஆனால் மீண்டும் உடல்நிலை மோசமானது. மீண்டும் ஒரு அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் முடிவெடுத்தனர். ஆனால் அவர்கள் முந்தைய நாள் இரவிலேயே மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

ஷஹீது மர்ஹூமின் குடும்பத்தில் அன்னாரது தந்தை வழி பாட்டனாரான குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சார்ந்த குலாம் தீன் சாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் உருவானது. அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான மதிப்பிற்குரிய அப்துல் அஸீஸ் பட்வாரியின் தோட்டத்தில் பணியாற்றி வந்தார்கள். அன்னார் ஒரு நாள் அவர்களுடன் காதியான் சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைச் சந்தித்த பிறகு பைஅத் செய்தார்கள்.

ஷஹீது ஜஃபருல்லாஹ் சாஹிப் அவர்கள் 1993 ஆம் ஆண்டு கராச்சியில் பிறந்தார்கள். சிரித்த முகத்துடன் எப்போதும் காணப்படுவார்கள். அவர்களுடைய உதட்டில் எப்போதும் சிரிப்பு தென்படும். மர்ஹூம் ஜமாஅத் பணிகளில் எப்போதும் போட்டி போட்டுக் கொண்டு பங்கெடுப்பார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணியை செய்து வந்தார்கள். அன்னார் வஸிய்யத் செய்திருந்தார்கள். ஷஹாதத்தின் போது அன்னாரது வயது 25 ஆகும்.

அவர்களது குடும்பத்தில் அவர்களது தந்தை லியாகத் அலி சாஹிப் அவர்களும், தாயாரான நஸீரா பேகம் சாஹிபா மற்றும் ஐந்து சகோதர்கள் உள்ளனர். 33 வயதை உடைய வஜாஹத், 31 வயதை உடைய மன்ஸூர் அஹ்மது, 28 வயதை உடைய முஸ்தன்ஸிர், 27 வயதை உடைய ஷஜாஹ் அஹ்மது மற்றும் 24 வயதை உடைய ஹாபிழ் முஹம்மது நஸ்ருல்லாஹ் சாஹிப் ஆகியோர் உள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் காயமடைந்த மூன்றாவது நபரான ஹாபிழ் நஸ்ருல்லாஹ் சாஹிப் அன்னாரது சகோதரரே ஆவார். அவருக்கு அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது. மருத்துவமனையில் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது. அல்லாஹ் அவர்களுக்கும் முழுமையான உடல்நலத்தை வழங்குவானாக. மேலும் இந்த மர்ஹூம்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக. மேலும் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குப் பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

## வக்ஃபே நவ் பெற்றோர்களின் கடமை

(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 28.10.2016 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பா பேருரையிலிருந்து...)

ஆரம்பத்திலிருந்தே தாய்மார்களும், தந்தையர்களும் தமது பிள்ளைகளின் மூளையில் நீங்கள் வக்ஃப் செய்யப்பட்ட குழந்தைகள் என்ற எண்ணத்தை ஊட்ட வேண்டும். மேலும், நாங்கள் உங்களை முற்றிலும் மார்க்கத்திற்குத் தொண்டாற்றுவதற்காக மட்டுமே அர்ப்பணித்துள்ளோம்.

இதுவே உங்களது வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஊட்டியவாறு துஆவும் செய்யக் கூடியவர்களாகப் பெற்றோர்கள் இருக்க வேண்டும். அந்நிலையில் நாம் மார்க்கத்திற்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் பிள்ளைகள் வளர்ந்து வருவர்.

EDITOR
O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 16 August 2018 Issue No. 33

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மலைகளும் ஆறுகளும் மரம் கொடிகளும் இறைவனை நினைவு கூறுவதில ஈடுபட்டிருக்கின்றன. உண்மையாளர்கள் பலரும் அவனை நினைவு கூறுவதில் ஈடுபட்டிருக்கின்றனர். எவர் தனது இதயத்தைக் கொண்டும் நாவைக் கொண்டும் அவனை நினைவு கூறுவதில் ஈடுபடவில்லையோ இறைவன் முன்பு பணிவை கடைபிடிக்கவில்லையோ அவரை இறைநியதி பல்வேறு வகையான துன்பங்களாலும் தண்டனைகளாலும் பணிய வைக்கிறது.

இறைவனின் திருமறையில் மலக்குகளாகிய வானவர்களைக் குறித்து அவர்கள் இறைவனுக்கு மிகவும் தாழ்மையாகக் கீழ்ப்படிகிறார்கள் என்று எழுதப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பூமியில் காணப்படும் ஒவ்வொர் இலையைப் பற்றியும் ஒவ்வொர் அணுவைப் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கின்றது. அவனது கட்டளை இல்லாமல் ஓர் இலை கூட கீழே விழுவதில்லை. அவனது கட்டளை இன்றி எந்த மருந்தும் சுகம் அளிக்கவும் முடியாது. மேலும் எந்த உணவும் பொருத்தமாகவும் முடியாது. ஒவ்வொரு பொருளும் முழுக்க முழுக்கப் பணிவுடனும் வணக்கத்துடனும் இறைவன் முன்னிலையில் வீழ்ந்துள்ளன.

மேலும் அவை அவனுக்குக் கீழ்ப்படிதலின் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளன. மலைகள், பூமி இவற்றின் ஒவ்வொரு துளியும், மரங்கள் புற்பூண்டுகள் இவற்றின் இலைகள் அவற்றின் ஒவ்வொரு பகுதியும், மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றின் எல்லா அணுக்களும் இறைவனைக் கண்டறிந்து கொள்கின்றன. மேலும் அவை அவனைப் பணிவதிலும் அவனைப் புகழ்வதிலும் துதிப்பதிலும் முனைப்புடன் ஈடுபட்டிருக்கின்றன. இதன் காரணத்தினாலேயே இறைவன் கூறி இருக்கின்றான்.

يُسَبِّحُ لِلّٰهِ مَا فِي السَّمٰوٰتِ وَمَا فِي الْاَرْضِ

அதாவது வானத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் இறைவனது தூய்மையை எடுத்துக் கூறிக் கொண்டும் வாழ்த்திக் கொண்டுமிருப்பது போல் பூமியிலுள்ள ஒவ்வொரு பொருளும் அவனது தூய்மையை எடுத்துரைத்துக் கொண்டும் வாழ்த்திக் கொண்டிமிருக்கிறது. **(62:2)**

ஆகவே பூமியின் மீது இறைவனைப் புகழ்வதும் வாழ்த்துவதும் நடைபெறுவதில்லையா? இதுபோன்ற கூற்று ஒரு முழுமையான இறைஞானியின் வாயிலிருந்து வர முடியாது. மாறாக, பூமியிலுள்ள பொருட்களில் சில பொருட்கள் ஷரீஅத் என்னும் நெறிமுறை சட்டங்களின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து கொண்டிருக்கின்றன. சில பொருட்கள் ‘‘கழா வ கத்ர்’’ என்னும் இறைவன் வகுத்த விதிகளின் கட்டளைகளுக்கு அடிபணிந்து கொண்டிருக்கின்றன.

மேலும் சில இவை இரண்டிற்கும் கீழ்ப்படிய ஆயத்தான நிலையில் இருக்கின்றன. மேகம், காற்று, நெருப்பு, பூமி இவை அனைத்தும் இறைவனுக்குக் கீழ்ப்படிவதிலும் அவனைத் துதிப்பதிலும் தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொள்கின்றன. ஒரு மனிதன் இறைவனுடைய ஷரீஅத்தின் கட்டளைக்குக் கீழ்ப்படியாவிடின் அவன் ‘‘கழா வ கத்ர்’’ என்னும் இறைவன் வகுத்த விதிகளின் கட்டளைக்குக் கட்டுப்படுகிறான். இந்த இரு சட்டங்களுக்கும் வெளியே யாருமில்லை. வானுலக ஆட்சியின் ஏதாவதொரு நுகத்தடி ஒவ்வொருவரின் பிடரியின் மீதும் இருந்தே வருகிறது.

எனினும் மனிதர்களின் உள்ளங்களில் காணப்படும் நன்மை தீமை ஆகியவற்றை அனுசரித்து கவனமின்மையும் இறைவனை நினைவு கூர்தலும் ஆகிய இரண்டும் பூமியில் தத்தமது வெற்றியை மாறி மாறி நிலைநாட்டி வருகின்றன. ஆனால் இறைவனது நுட்பமான அறிவும், நல்ல நோக்கமும் இல்லாமல் இந்த ஏற்றத்தாழ்வுகள் தாமாகவே உண்டாவதில்லை.

பூமியில் இவ்வாறு ஆக வேண்டுமென்று இறைவன் நாடியதாலேயே அவ்வாறு ஆகி இருக்கிறது. பகலும் இரவும் மாறி மாறி வருவது போல் நேர்வழியும் வழிகேடும் இறைவனது சட்டங்களுக்கும் அவனது கட்டளைகளுக்கும் ஏற்றவாறு நடந்து கொண்டிருக்கின்றன. இவை தாமாக நடைபெறுவதில்லை. ஒவ்வொரு பொருளும் அவனது குரலைக் கேட்டுக் கொண்டும் அவனது தூய்மையை நினைவு கூர்ந்து கொண்டும் இருக்கின்றது.

பைபிளின் புதிய ஏற்பாடு பூமி இறைவனைத் துதிப்பதில்லை எனக் கூறுகிறது. இதற்குக் காரணம் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கும் இந்த துஆவின் அடுத்த வசனத்தில் இது வரை பூமியில் இறைவனது ஆட்சி வரவில்லை என்று சூசகமாகக் கூறப்பட்டுள்ளதேயாகும். எனவே ஆட்சி இல்லாத காரணத்தாலோ வேறு ஏதாவது காரணத்தாலோ இறைவனது விருப்பம் வானத்தில் உண்டானது போல் பூமியின் மீது உண்டாக முடியவில்லையாம். ஆனால் திருக்குர்ஆனின் போதனை இதற்கு முற்றிலும் மாறானதாகும்.

எந்த ஒரு திருடன், கொலையாளி, விபச்சாரம் செய்பவன், நிராகரிப்பவன், கெட்டவன், கிளர்ச்சி செய்பவன், குற்றம் புரியக் கூடியவன் ஆகியோர் எவரும் வானத்திலிருந்து அதிகாரம் கொடுக்கப்படாத வரை எவ்வித தீமையும் பூமியில் செய்ய முடியாது என்று தெளிவாகக் கூறுகிறது. ஆகவே வானத்தின் ஆட்சி பூமியில் இல்லை என்று எவ்வாறு கூற முடியும்? இறைவனின் சட்டங்கள் பூமியில் செயல்படுவதற்கு ஏதாவது எதிர் ஆதிக்கம் தடையாக இருக்கின்றதா? (அல்லாஹ் தூய்மையானவன்).

அவ்வாறு ஒருபோதும் இல்லை. மாறாக இறைவன் வானத்தில் மலக்குகளுக்காகத் தனிச் சட்டத்தையும், பூமியில் மனிதர்களுக்காகத் தனிச் சட்டத்தையும் உண்டாக்கி இருக்கிறான். மேலும் இறைவன் தனது வானத்தின் ஆட்சியில் மலக்குகளுக்கு எவ்வித அதிகாரத்தையும் அளிக்கவில்லை. மாறாக, அவர்களது இயல்பிலேயே கீழ்ப்படியக் கூடிய பண்பை இறைவன் அமைத்திருக்கின்றான். ஆகவே அவர்கள் மாற்றமாக செயல்படவே முடியாது. அவர்களுக்கு மறதியோ தவறுகளோ ஏற்பட முடியாது. ஆனால் மனித இயல்புக்கு ஒன்றை ஏற்றுக் கொள்வதற்கும், ஏற்றுக் கொள்ளாமலிருப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த அதிகாரம் மேலிருந்து கொடுக்கப்பட்டதாகும். எனவே கெட்ட மனிதர்கள் இருப்பதனால் இறைவனது ஆட்சி பூமியிலிருந்து மறைந்து விட்டது என்று கூற முடியாது. மாறாக, எல்லா வகையிலும் இறைவனது ஆட்சியே உள்ளது.

ஆயினும் சட்டங்கள் இருவகைப்படும். ஒன்று, வானத்தின் மலக்குகளுக்காக கழா வ கத்ர் என்னும் (இறைவன் வகுத்த விதியின்) சட்டமாகும். இதன்படி அவர்கள் தீமைகள் செய்ய முடியாது. இன்னொன்று பூமியில் மனிதனோடு சம்பந்தப்பட்ட கழா வ கத்ர் என்னும் (இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட) விதியாகும். இதன்படி அவர்களுக்கு தீமைகள் செய்ய வானத்திலிருந்து அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆயினும், இறைவனிடம் அவர்கள் அவனது ஆற்றலை வேண்டும் போது அதாவது இஸ்திஃபார் என்னும் பாவமன்னிப்புக் கோரும் போது இறைவனது பரிசுத்த ஆவியின் உதவியால் அவர்களது பலவீனங்கள் அகன்று விட முடியும்.

மேலும் இறைவனது ரஸூல், நபிமார்கள் ஆகியோர் தப்பித்துக் கொள்வது போல் இவர்களும் பாவம் செய்வதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். மேலும் எவர்கள் பாவம் செய்தவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இஸ்திஃபார் (என்னும் பாவமன்னிப்புக்) கோருவதால் அவர்களுக்கு உண்டாகும் பலன் என்னவெனில் பாவத்தின் விளைவுகளிலிருந்தும் அதாவது தண்டனைகளிலிருந்தும் காப்பாற்றப்படுகிறார்கள். ஏனெனில் ஒளி தோன்றும்போது இருள் எஞ்சியிருக்க முடியாது.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 31–34)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad